பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி09 வியாழக்கிழமை 24.05.2018 | கதிர் 199

### இனிது ரகசியம் அல்ல!

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் விடயத்தில் அரசியல்வாதிகளை நம்பி இனிப் பயனில்லை என்ற முடிவுக்கு தென்னிலங்கை சிவில் சமூகத்தவர்கள் வந்து விட்டார்கள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என்று

பக்கம் 03

# கோட்டாவின் குற்றங்கள் குறித்து அரசு அமெரிக்காவுக்கு அறிக்கை

## பாரதூரமான விடயங்களை உள்ளடக்கி

கொழும்பு, மே 24

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, அச்சமயம் மேற்கொண்டவை என்று கூறப்படும் பாரதூரமான குற்றச் செயல்கள், ஊழல் மோசடிகள் தொடர்பில் விவரமான அறிக்கை ஒன்றை - அமெரிக்காவின் பிராஜா உரிமையையும் அவர் கொண்டவர் என்ற முறையில் - அமெரிக்க அரசுக்கு அனுப்பிவைக்கத் தயாராகி வருகிறது இலங்கை அரசு.

இதற்கான முன்னெடுப்புக்களில் அரசு தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக அரச உயர்மட்டங்கள் தெரிவித்தன.

பக்கம் 14

## போராளியின் வீட்டு முற்றத்தில் சிக்கிய வெடிபொருள் 'ஸ்கானர்'

### அகழ்வுப் பணியின்போது மீட்பு



கிளிநொச்சி, மே 24

முன்னாள் போராளி ஒருவரின் வீட்டு முற்றத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியின்போது வெடிபொருள் 'ஸ்கானர்'

பக்கம் 14

## முரசுமோட்டை வீட்டு வளவில் பெட்டி பெட்டியாக குண்டுகள்!





### நேற்று மீட்டனர் பொலிஸார்

கிளிநொச்சி, மே 24

கிளிநொச்சி, முரசுமோட்டைப் பகுதியில் பொதுமகன் ஒருவரின் வீட்டு வளவுக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவானவெடிபொருள்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன எனக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

முரசுமோட்டையில்வேலுப்பிள்ளை மாணிக்கவாசகர் என்ற பொது மகனின் வீட்டு வளவில் வெடிபொருள்கள்

பக்கம் 14

## கோட்டாவுக்கு கடும் சிக்கல்!

கொழும்பு, மே 24

அமெரிக்கக்குடியுரிமையைநீக்குமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை அமெரிக்க அரசு நிராகரித்துள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல்

பக்கம் 14

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு சகல வசதிகளையும் வழங்குக!

### அரசிடம் கோருகிறார் சம்பந்தன்

திருமலை, மே 24

போரினால் நாட்டை விட்டு வெளியேறி அகதிகளாக இருந்துவிட்டு, சொந்த இடங்களில் வந்து மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கான சகல வசதிகளையும் அரசும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் துரி

பக்கம் 14

## விலைவாசி உயர்வை எதிர்த்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்




வவுனியா, மே 24

எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருளின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூக விழிப்புணர்வுக்கான மக்கள்

பக்கம் 14

## சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நேற்று மின்னல் தாக்கம்



யாழ்ப்பாணம், மே 24

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கணினிக் கூடத்தில் நேற்று மதியம் மின்னல் தாக்கியுள்ளது.

பக்கம் 03

## மாகாண சபைத் தேர்தல்: இவ்வாரத்துக்குள் முடிவு

கொழும்பு, மே 24

கலைக்கப்பட்டுள்ள மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்தவது குறித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சு நடத்தி, இந்த வாரத்தில் முடிவொன்றைப் பெற்றுத் தருவதாகப் பிரதமர் தம்மிடம் கூறியுள்ளார் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று நாடாளு

பக்கம் 14

## நகுலேஸ்வரம் கோபுரம் மின்னல் தாக்கிச் சேதம்

யாழ்ப்பாணம், மே 24

யாழ். குடாநாட்டில் நேற்று நண்கல் பரவலாகப் பொழிந்த இடியுடன் கூடிய மழையின் போது, கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயக் கோபுரத்தின் யாழிகள்

பக்கம் 14

## பிரதிச் சபாநாயகர் பதவியை அங்கஜனுக்கு வழங்கக்கூடாது

### கூட்டமைப்பு கடும் எதிர்ப்பு


கொழும்பு, மே 24

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு அங்கஜன் இராமநாதன் நிறுத்தப்பட்டால், தமிழ்த் தேசியக் கூட்ட

பக்கம் 14

## உயரழுத்த மின்சாரம் பாய்ந்து தந்தையும் மகனும் உயிரிழப்பு!

### இளைய மகன் கையில் காயம் கரவெட்டியில் நேற்றுத் துயரம்





யாழ்ப்பாணம், மே 24

கரவெட்டி, கரணவாய் கிழக்கில் உயர் அழுத்த மின்சாரம் தாக்கித் தந்தையும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்தனர். அவர்களை காப்பாற்றுவதற்கு முயற்சித்த இளைய மகன் கையில்

பக்கம் 14

## இடரால் 13 பேர் சாவு! 85,000 பேர் பாதிப்பு!!

### மழை தொடரும் என அறிவிப்பு



கொழும்பு, மே 24

இயற்கைச் சீற்றத்தால் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர். 14 மாவட்டங்களைச் சேர்ந்த 18,542 குடும்பங்களைச் சேர்ந்த 84,943 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பக்கம் 14

# இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு 89 மில்லியன் ரூபா நிதியுதவி!

கொழும்பு, மே 24

இலங்கை தற்பொழுது எதிர் கொண்டுள்ள இயற்கை அனர்த்தத்திற்குத் தயாராவதற்கும், உடனடியாகச் செயல்படுவதற்குமாக ஆஸ்திரேலிய அரசு, உலக உணவு வேலைத் திட்டம் மற்றும் யுனிசெவ் அமைப்பு ஆகியன இணைந்து 89 மில்லியன் ரூபா நிதியை இலங்கைக்கு வழங்கியுள்ளன.

மூன்று வருட காலத்திற்கு இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான உடன்படிக்கை சமீபத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வெள்ளம் கடும்காற்று, வறட்சி முதலான இயற்கை அனர்த்தங்கள் எதிர் கொள்ளும் நாடுகளில் முக்கிய நாடாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.

உலகளாவிய காலநிலை மாற்றத்தரவுகளுக்கு அமைவாக இலங்கை இந்த பட்டியலில் முக்கிய இடம்பெற்றுள்ளது.

வருடாந்தம் இடம்பெறும் வறட்சி , வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின்



காரணமாக பொதுமக்களின் வீடு, பொருளாதாரம், சமூக நடவடிக்கைகள் சீர்குலைவதாக உலக உணவு வேலைத் திட்டத்தின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இரத்தினபுரி, காலி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மாத்தறை, அனுராதபுரம், களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் மாவட்டங்களாகவுள்ளன.

இந்த அனர்த்தங்களை எதிர் கொள்ளும் பொதுமக்களின் முன்னெச்சரிக்கைக்கான நடவடிக்கைகளை அதிகரித்தல், சிரமங்களைக் குறைத்தல் உள்ளிட்ட பணிகளுக்கு உதவும் வகையிலேயே உலக உணவு வேலைத்திட்டம் இந்த நிதியுதவியை வழங்கியுள்ளது.

## வன விலங்குகளுடன் போராடிக் கொண்டே மக்கள் வாழும் நிலைவரக் காரணம் என்ன?



**நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி கேள்வி!**

எமது மக்கள் வன விலங்குகளுடன் போராடிக் கொண்டே வாழ வேண்டிய நிலைவரக் காரணம் என்ன? என நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய சூழல் சட்டத்தின் கீழான 7 கட்டளைகள் தொடர்பில் நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகள் எனப் பெயரிட்டுள்ள பல வனங்களிலிருந்து பாரியளவில் மரங்கள் வெட்டப்பட்டு, கடத்தப்படுகின்றன. இந்த நிலையில் நாட்டின் வன அடர்த்தியை அதிகரிக்கப் போவதாகக் கூறுகிறீர்கள்.

வனங்கள் அழிக்கப்பட்டு, இன்று பல மாவட்டங்களில் மக்கள் அன்றாடம் வன விலங்குகளுடன் போராடிக் கொண்டே வாழவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாது, விவசாய செய்கைகள் நாளாந்தம் பாரியளவில் அழிக்கப்பட்டு வருகின்றன.

சூழலைப் பாதுகாப்பதற்கு மரக் கன்றுகள் நடுவதாகக் கூறி, ஆயிரக்கணக்கில் நடப்பட்டாலும், நட்டியப் பின்னர் அவற்றைப் பராமரிப்பதற்கு எவருமின்றி, அவை கருகியும், கால்நடைகளுக்கு உணவாகியும் மறைந்து விடுகின்றன.

அடர்ந்த பாதுகாப்பு வனங்களில் எல்லாம் மரங்களை வெட்டிக்கொண்டு, எமது பகுதிகளில் எமது மக்களது வாழ்வாதார, குடியிருப்புப் பகுதிகளை எல் லாம் வன இலாக்காவுக்குச் சொந்தமானவை என எல்லைகள் இடுகின்ற பரிதாப நிலையைக் காணக் கூடியதாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொருத்து வீட்டுக்கு பதிலாக வடக்கு – கிழக்கில் கொங்கிறீற் பனல் முறை வீடமைப்புத் திட்டம்

கொழும்பு, மே 24

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்காக 40 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

மோதலின் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்ட குறைந்த வருமானங்களை கொண்ட குடும்பங்களின் வீடில்லா பிரச்சினைக்கு அரசு நிரந்தர தீர்வை வழங்க முன்வந்துள்ளது.

இதன்கீழ் பாரிய அளவிலான வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் தேவை ஏற்பட்டுள்ளது.

இதற்காக பொருத்து வீடு என்ற தொழில்நுட்பத்தின் கீழ் 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைக்கு சில தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனடிப்படையில் இதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதற்கு மாற்று நடவடிக்கையாக தேசிய கட்டட ஆய்வு அமைப்பால் சிபார்சு செய்யப்பட்டுள்ள கொங்கிறீற் பனல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அமைக்கப்படும் வீடுகளுக்காக இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களை போன்று அரசியல் பிரதிநிதிகளும் வரவேற்றுள்ளனர்.

இதற்கமைவாக வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட குறைந்த வருமானத்தை கொண்ட குடும்பங்களுக்கு கொங்கிறீற் பனல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 650 சதுர அடியைக்கொண்ட 40 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு மீள்குடியேற்றம், புனர்வாழ்வு , வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் சமர்ப்பித்த ஆவணக்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மேஜர் புளத்வத்த பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, மே 24

மூத்த ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபரான இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியான மேஜர் பிரபாத் சீவலி புளத்வத்த பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கம்பகா இம்புல்கொடவில் கடந்த 2013ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி, ஊடகவியலாளர் உபாலிதென்னக்கோனும் அவரது மனைவியும் தாக்கப்பட்டனர்.

இந்தச்சம்பவம்தொடர்பாகக் குற்றம்சாட்டப்பட்டு, மேஜர் சீவலி புளத்வத்த கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டார்.

2017 ஏப்ரல் 7ஆம் திகதி கம்பகா நீதிமன்றம், அவரைப்பிணையில் விடுவித்திருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை கம்பகா நீதிமன்றம்மேஜர்புளத்வத்தைக்கு அழைப்பாணை விடுத்திருந்தது. எனினும் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில், கடந்த திங்கட்கிழமை சரணடைந்தார்.

இதையடுத்து அவரை நிபந்தனைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

## இடரால் இறந்த ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு!



கொழும்பு, மே 24

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தேசிய இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும்.

இறுதிக்கிரியைகளுக்காக 15ஆயிரம் ரூபா நிதி பிரதேச செயலாளர் , கிராமசேவகர் ஊடாக உடனடியாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சமிந்த பத்திரன தெரிவித்துள்ளார்.

எஞ்சிய தொகை 85 ஆயிரம் ரூபா சம்பந்தப்பட்டவரின் மரணச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். இரண்டு கட்டங்களில் இந்த தொகை வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அனர்த்தம் ஏற்பட்ட மாவட்டங்களுக்குத் தனித்தனியாக நிதி வழங்கப்பட்டுள்ளது. அனத்தத்தின் காரணமாக 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களுள் 4 பேர் இடிமின்னலால் உயிரிழந்துள்ளனர். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 60 ஆயிரம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கணுக்கேணி கிழக்கில் மின்னல் தாக்கி தீப்பற்றி எரிந்த வீடு!



முல்லைத்தீவு, மே 24

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 5.00 மணி வரை தொடர்சியாகப் பெய்த கடும் மழை மற்றும் இடி மின்னல் தாக்கத்தில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

முள்ளியவளைப் பிரதேசத்தில் காற்றினால் தென்னை மரம் ஒன்று வீழ்ந்துள்ளது.

இந்தப் பகுதியில் வசித்து வரும் ந.தங்கம்மா என்ற வயோதிபதாயார் ஒருவரின் காணிக்குள்நின்றதென்னை மரம் மலசலகூடத்தில் வீழ்ந்து மலசலகூடம் கூரை முற்றாகச் சேதமடைந்துள்ளது.

கணுக்கேணி கிழக்குப் பகுதியில் ந.பாலசுந்தரம் என்பவரின் வீட்டில் உள்ள பனை ஓலை வீடு ஒன்றின் மீது இடி மின்னல் தாக்கி வீடு தீப்பற்றி எரிந்துள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர். வீட்டின் கூரை தீப்பற்றி எரிந்தவேளை அயலவர்களின் உதவியுடன் அது அணைக்கப்பட்டது. சம்பவம் அறிந்து வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் இந்த வீட்டிற்கு தறப்பாள் கொடுத்து உதவியுள்ளனர். (க-81)

# நீதிபதி இளஞ்செழியனுக்கு நேற்று பிரிவுபசார வைபவம்






திருகோணமலை மேல் நீதிமன்றுக்கு மாற்றலாகிச் செல்லும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் சேவைக்கு மதிப்பளித்து பிரிவுபசார வைபவம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்றது.


யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அரச சட்டவாதிகள் நாகரட்ணம் நிஷாந்த், திருமதி பிரிந்தா ரெஜிந்தன் ஆகியோரும் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன், மேல் நீதிமன்ற வலயக் கணக்காளர் வெல்லவராஜன் ரதீஸ் மற்றும் உத்தியோகத்தர்கள், மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் சேவையைப் பாராட்டி உரையாற்றினர்.

மேலும் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் சேவைக்கு மதிப்பளித்து வாழ்த்துப் பாமலை மற்றும் நினைவுச் சின்னம் என்பனவற்றை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நலன்புரிச் சங்கம் சார்பில் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் வழங்கிவைத்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றார். கடந்த மூன்று ஆண்டுகளாக கடமையாற்றிய அவர், நீதிச் சேவை ஆணைக்குழுவின் சேவைப் பிரமாணத்தின் அடிப்படையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக எதிர்வரும் 28ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். (ஜ)

# சீரற்ற வானிலை காரணமாக 8 பரீட்சைகள் ஒத்திவைப்பு



கொழும்பு, மே 24

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலைக் காரணமாக, பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்படவிருந்த 8 பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, இந்த மாதம் 24, 25, 26, 27 மற்றும் ஜூன் மாதம் 2ஆம் திகதி நடத்தப்படவிருந்த 8 பரீட்சைகளே இவ்வாறு பிற்போடப்படுகின்றன எனப் பரீட்சைகள் திணைக்களப் பதில் ஆணையாளர் ஜெனரல் சனத் பூஜித தெரிவித்தார். (ஜ)

# நிதி நிறுவனங்கள் செயலிழப்பு: நாடாளுமன்றில் முழுநாள் விவாதம்



கொழும்பு, மே 24

நாட்டில் நிதி நிறுவனங்கள் செயலிழந்து வருகின்றமை தொடர்பில் நாடாளுமன்றில் முழுநாள் விவாதமொன்று நடத்தப்பட வேண்டுமென்ற ஜே.வி.பி.யின் யோசனை தொடர்பில் முழுநாள் விவாதமொன்று நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியபோது இது தொடர்பில்ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சில தனியார் நிதி நிறுவனங்கள் நிதிமோசடிச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. அந்த நிறுவனங்கள் மத்தியவங்கியின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன. எனவே கண்காணிப்பு இடம்பெறுகின்ற போதும் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் என அநுரகுமார திஸாநாயக்க கேள்வியெழுப்பினார்.

அத்துடன் நாட்டில் நிதி நிறுவனங்கள் செயலிழந்துவருகின்றமை குறித்து முழுநாள் விவாதமொன்று நடத்துவதற்கு அனுமதி வழங்கவேண்டுமெனச் சபாநாயகரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குச் சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இணக்கம் தெரிவித்துள்ளார். (ஜ)

# வடக்கில் காடழிப்பைத் தடுக்க அரசு ஏற்பாடு

## அமைச்சர் கயந்த தெரிவிப்பு

கொழும்பு, மே 24

வட மாகாணத்தில் உள்ள அனைத்துக் காடுகளும் அழிக்கப்படுவதை தடுப்பதற்காக சுற்றறிக்கை ஆலோசனை வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ்தேவானந்தா முன்னதாக ஜனாதிபதியிடம் நாடாளுமன்றத்தில் எழுப்பியிருந்த கேள்வி ஒன்றுக்கு, ஜனாதிபதி சார்பில் நேற்றுப் பதில் வழங்கிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்தவும், அவற்றை உரிய முறையில் பாதுகாக்கவும், நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணத்தில் ஏதாவது காடழிப்புச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றனவா? என்பது தொடர்பில் ஆகாய மார்க்கமாக அவதானிக்குமாறு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய, வான்படையினரும் வனப் பாதுகாப்பு அதிகாரிகளும் இணைந்துசெயற்படுகின்றனர்.

இந்த நிலையில், காடழிப்புச் செயற்பாடுகள் ஏதேனும் இடம்பெறுமாயின் அது குறித்து, வனப்பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும், அமைச்சர் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

வடக்கின் அனைத்து வனப் பகுதிகளும், காணிகளும் ஜீ.பி.எஸ். எனப்படும் பூகோள இடநிலை அமைப்புத் தொழில்நுட்பம் ஊடாகப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தின் வனப் பகுதிகளைப் பாதுகாக்கும் நோக்கில் விசேட திடீர்ச் சுற்றிவளைப்புப் பிரிவு ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் கயந்த கருணாதிலக்க கூறினார்.

இதேவேளை, சட்டவிரோத மாகக்காடழிப்புச்செயற்படுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வனபாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனைத்து வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய காடழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட அவர்களால் முடியும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேநேரம், கடந்த 2017 ஆம் ஆண்டுவனப்பாதுகாப்புதிணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்ட வனப்பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பிலும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.



இதற்கமைய, வவுனியாவில் 40 அனுமதியற்ற காணி சுவீகரிப்புகளும், அனுமதியற்ற நிலையில் மரங்களைத் தரிக்கப்பட்டமை தொடர்பில் 68 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அத்துடன், மன்னாரில் 7 அனுமதியற்ற காணி சுவீகரிப்புகளும், அனுமதியற்ற நிலையில் மரங்களைத் தரிக்கப்பட்டமை தொடர்பில் 42 சம்பவங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் கயந்த கருணாதிலக்க கூறியுள்ளார்.

# பதவி விலகினார் நவாவி

கொழும்பு, மே 24

அமைச்சர் ரிஷாத் பதியூதின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என்.எச்.எம்.நவாவி நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

கட்சியின் முடிவை ஏற்றே அவர் பதவி விலகினார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரது இடத்துக்குக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். (ஜ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு அடித்துக்கூறி, சத்தியம்செய்து, அதனைத் தேர்தல் வாக்குறுதியாகவும் பிரகடனப்படுத்தி விட்டு, அதன் மீது ஏறி சந்திரிகா குமாரதுங்க இரண்டுதடவைகளும், மஹிந்த ராஜபக்ஷ இரண்டுதடவைகளும், இப்போது மைத்திரிபால சிறிசேன இன்னொருதடவையுமாக ஜனாதிபதியாகி விட்டனர்.

ஆனால் அந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மட்டும் ஒழிக்கவே முடியவில்லை.

அந்த வாக்குறுதியைக் கொடுத்து ஜனாதிபதியான அரசியல்வாதிகள் எல்லோரும், அந்தப் பதவியை ருசித்து, ரசித்து, அதிகாரத்தைப் பிரயோ கித்து விட்டு அடுத்ததடவையும் ஜனாதிபதியாக முயன்றார்களே தவிர, அந்த அந்த ஆட்சி முறையை ஒழிப்பதற்கு முயலவே இல்லை.

அதுவும், கடைசியாக மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்க முயன்றபோது அவர் கட்டாயம் அதை ஒப்பேற்றி முடிப்பார் என்றே எல்லோரும் அதீதமாக நம்பினார்கள். ஆனால் நாய் வாலை நிமிர்த்த முடியவில்லை.

அரசியல்வாதிகளுக்கும் பதவி மற்றும் அதிகாரம் மீதான ஈடுபாட்டிற்கும் உள்ள தொடர்பு துண்டிக்கவே முடியாது என்று எண்ணி வேதனைப்படுத்துவதைத் தவிர தமக்கு வேறு வழியில்லை என்பதை சிவில் சமூகம் இப்போது உணரத் தொடங்கியுள்ளது.

ஆகையால், அடுத்த தடவை அரசியல்வாதிகளை விடுத்து சிவிலியன் ஒருவரைப் பொது வேட்பாளராகக் களமிறக்கி, அவரை வெற்றிபெறச் செய்து, அவர் மூலமாவது இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கலாமா என்று சிந்திக்கின்றனவாம் கொழும்பு சிவில் சமூக வட்டாரங்கள்.

அதற்காக மக்கள் செல்வாக்கும், நம்பிக்கையும், மதிப்பும் உள்ளவராகவும் – இவை எல்லாவாற்றுக்கும்மேலாக சிறுபான்மை மக்களினாலும் விரும்பப்படுபவருமான – ஒருவரைத் தேடுகின்றதாம் கொழும்பு சிவில் சமூகம்.

அந்த சிவில் சமூகத்தின் முயற்சியின் பின்னணியில் வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவரும் முக்கிய பங்காற்றுகின்றார் என்றும் கூறப்படு கின்றது.

கடைசியாக, அத்தகைய ஒருவரை அவர்கள் தேடிப் பிடித்திருக்கின்றார்கள் என்றும் தெரிகின்றது. அவர் யார் தெரியுமா?

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்காகாரதான் அவர்.

கிரிக்கெட்டில் கலக்கிய சங்கக்காரவினால் அரசியலிலும் கலக்க முடியும் என்று நம்புவது துர்லபம்தான். ஏனென்றால் அது கிரிக்கெட் போல 'ஜென்டில்மன்' விளையாட்டு அல்ல. Politics is a dirty game.

-மின்னல்-

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணினிக் கூடத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்மானியில் மின்னல் தாக்கியது. மின்மானி தீப்பிடித்தபோதும் அது அணைக்கப்பட்டது.

சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் சாவகச்சேரிக்கு விரைந்தனர். இலங்கை மின்சார சபையினரும் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்குச் சென்று பார்வையிட்டனர்.

சம்பவத்தையடுத்து, கல்லூரி மாணவிகள் அச்சமடைந்து காணப்பட்டனர்.

இந்நிலையில், தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் சம்பவத்தைப் பார்வையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-7)

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## புதிய அரசமைப்பு உருவாக்கம்; தலைவிதி இன்று தெளிவாகும்

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலான அரசமைப்பு வழிகாட்டல் குழு நீண்ட காலத் தூக்கத்தின் பின்னர் இன்று விழித்துக் கூடுகின்றது.

இந்த முயற்சியை உயிரோட்டமாக வைத்திருந்து இனியும் தொடர்வதா அல்லது இத்தோடு இந்த விடயத்தை முடித்துக் கொள்வதா அல்லது சாகடிக்காமல் இன்னும் கொஞ்சக் காலத்துக்கு இந்த முயற்சியைக் கிடப்பில் போட்டு இழுத்தடிப்பதா என்பது பெரும்பாலும் இன்றைய வழிகாட்டுக் குழுவின் கூட்டத்தில் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அவரைத் தொடர்ந்து இந்த நல்லாட்சி அரசும் பதவிக்கும், அதிகாரத்துக்கும் வந்த சமயத்தில் இரு தரப்புகளினாலும் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் பிரதானமான விடயம் இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கம்தான்.

மூன்று முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கம் இடம்பெறும் எனத் தேர்தல்கள் சமயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளினாலும் உறுதிகூறப்பட்டது.

முதலாவது – நாட்டில் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதத்தில் – நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய தீர்வு ஒன்றை நடைமுறைப்படுத்தும் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலை உள்ளடக்குதல்.

அடுத்தது – நாட்டின் தேர்தல் முறைமைகளை மறுசீரமைத்து நெறிப்படுத்துதல்.

மூன்றாவது – நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழித்து, நாட்டுக்கும், நாடாளுமன்றுக்கும் பதிலளிக்கக் கூடிய பிரதமர் தலைமையிலான அரசுக் கட்டமைப்பு முறையை ஏற்படுத்துதல்.

இந்த மூன்று பிரதான விடயங்களையும் உள்ளடக்கியதானதாக புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்றே வாக்குறுதியளிக்கப்பட்டது.

ஆனால், இந்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தி நிறைவேற்றுவதற்கான செயற்பாட்டில் நல்லாட்சி அரசு உரிய அளவு வரை இன்னும் முன்நகரவேயில்லை என்பதுதான் துரதிஷ்டவசமான உண்மையாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை அடியோடு ஒழிப்பேன் என்று வாக்குறுதியளித்து, அதனடிப்படையில் மக்கள் வாக்குகளைத் திரட்டி, வெற்றிகரமாகப் பதவிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பத்தில் அந்த முயற்சியில் ஒன்றித்துத்தான் ஈடுபட்டார்.

அவர் அதிகாரத்துக்கு வந்தமையைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் கட்டுமட்டில்லா அதிகாரங்களில் சில கணிசமாகக் குறைக்கபட்டன என்பது உண்மைதான்.

ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியினால் அவரது அதிகாரத்தைக் குறைக்கும் முதல் நடவடிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறசேன தலைமையில்தான் இடம்பெற்றது என்று கூறுவது தவறல்ல.

ஆனால், அதற்குப் பின்னர் இந்த விடயங்களில் முன்நகரும் முயற்சிகளை முழு ஈடுபாட்டுடன் – முழு உளத் தூய்மையுடன் – அவர் ஈடுபடவேயில்லை என்பதும் கூட மறுக்கக் கூடியதல்ல.

அந்த ஆரம்ப முயற்சிகளுக்குப் பின்னர், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி நாடாளுமன்றத்தின் பணி, என்னுடையதல்ல என்ற போக்கில் விட்டேத்தியாகத்தான் அவர் செயற்பட்டார், செயற்பட்டு வருகின்றார் என்பது துலாம்பரமான ஒன்று.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான முயற்சிக்கு முழு அளவிலான ஒரு தலைமைத்துவத்தை அவர் வழங்கவேயில்லை.

தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் கடைசி அந்தத்தை நெருங்கும் அவருக்கு, இந்தப் பதவியில் இன்னொரு தடவை நீடித்து, அதிகாரத்தைத் தொடர்ந்து ருசிக்கும் ஆசை வந்துவிட்டது. அதனால், அந்த ஆட்சி முறைமையையே ஒழிக்கும் திட்டத்தை முன்நகர்த்தும் எத்தனத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தாது, அதனை இழுத்தடிக்க இடமளித்து நிற்கின்றார் அவர்.

பதவிப் போட்டிகளினாலும், அரசியல் முரண்பாடுகளினாலும் குழம்பிப் போய் நிற்கும் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட, புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி விடயத்தில் பிளவுண்டு, வெவ்வேறுபட்ட கருத்து நிலைப்பாடுகளில் பிரிந்து நிற்கின்றது.

இந்தச் சூழலில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவை நாடாளுமன்றத்தில் இன்றைய நிலையில் பெற்றுக் கொள்வது என்பது இக்கட்டான – இயலாத – விடயம் போலவே தோன்றுகின்றது.

முடிவு என்னவென்பது இன்றைய வழிகாட்டல் குழுவின் கூட்டத்தின் முடிவில் ஓரளவு தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

# காட்டுப்புல மாணவர்களுக்காக வெண்கரம் இலவசப் படிப்பகம்



யாழ்ப்பாணம், மே 24

சுழிபுரம் – காட்டுப்புலத்தில் வெண்கரம் இலவசப் படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இதற்கான சம்பிரதாயபூர்வ நிகழ்வு இடம் பெற்றது.

வெண்கரம் நிறுவனம் பின் தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றி, அந்தக் கிராமங்களை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கல்விச் செயற்பாட்டை முதன்மையாகக் கொண்டு சமூக நலச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

பொன்னாலையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட படிப்பகம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாகப் பாண்டவெட்டை மற்றும் காட்டுப்புலத்தில் உள்ள மாணவர்களின் நன்மை கருதி அங்குள்ள கிராம மட்ட அமைப்புக்கள், வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்களின் அனுசரணையுடன் வெண்கரம் படிப்பகம் ஆரம்பிக்கப்படுள்ளது.

அளுள்தீபம் சனசமூக நிலையத் தலைவர் எஸ்.ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இதன் ஆரம்ப நிகழவில், வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான சி.இதயகுமாரன், செ.கிருஸ்ணா, வெண்கரம் பிரதான செயற்பாட்டாளர் மு.கோமகன், வலிகாமம் கல்வி வலய தமிழ்பாட ஆசிரிய ஆலோசகரும் வெண்கரம் ஆலோசகருமான திருமதி ச.சுகுணா, காட்டுப்புலம் அ.த.க பாடசாலை அதிபர் எஸ்.சிவானந்தராசா, கிராம சேவையாளர் ஜீவராசா மற்றும் கல்வியியலாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# பனை தென்னைச் சங்கங்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க உதவி

## 27 மில்லியன் ரூபா ஒதுக்கினார் சிறீதரன் எம்.பி

கிளிநொச்சி, மே 24

கிளிநொச்சி பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திகளை வினைத்திறனுடன் தொழில்நுட்ப ரீதியாக மாற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி சிறீதரனால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞானசோதியிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சி சிறீதரனால் நேரடியாக அவரது அலுவலகத்திற்குச் சென்று முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கரைச்சி பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்கத்துக்கு 11.20 மில்லியன் ரூபாவும், பூநகரி பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்கத்துக்கு 5 மில்லியன் ரூபாவும், பச்சிலைப்பள்ளி பனை தென்னை வள கூட்டுறவுசங்கத்துக்கு 11 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் மக்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்



கிளிநொச்சி, மே 24

கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் போரினால் பாதிக்கப் பட்ட மக்கள் சிலருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது பேருக்கு இந்த வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீ தரன்,கரைச்சிப் பிரதேச சபையின் தவிசா ளர் வேளமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# ஆலயங்களுக்கு சிமெந்து பை வழங்கினார் படைத் தளபதி

இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தலைமையகத்தால் மாவட்டத்தைச் சேர்ந்த வறிய, வருமானம் குறைந்த, போரால் பாதிக்கப்பட்ட 100 ஆலயங்களின் கட்டுமான வேலைகளுக்கு உதவும் திட்டத்தின் முதல் கட்டமாக நேற்றுப் புதன்கிழமை காலை 30 ஆலயங்களுக்கு தலா 20 பைக்கெற் சிமெந்துகள் வழங்கிவைக்கப்பட்டன.

இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தலைமையகத்தில் இடம்பெற்ற வைபவத்தில் வைத்து யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி



மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி ஆலயங்களின் பிரதிநிதிகளிடம் சிமெந்துப் பைகளைச் சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்.

இந்த வேலை திட்டத்தில் பயனாளிகளாக இணைந்து கொண்ட ஏனைய ஆலயங்களுக்கான சிமெந்துப் பைகள் கட்டம் கட்டமாக வருகின்ற தினங்களில் வழங்கி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

## நாளை

25.05.2018
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : அத்தம் மு.ப 10.01 வரை
திதி : ஏகாதசி மு.இ 7.58 வரை
சுபநேரம் : 5.52 – 7.22 வரை
இராகுகாலம் : 10.22 – 11.52 வரை

# கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி – ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, மே 24

மலேசியாவில் இடம்பெற்ற 15 வயதுக்குட்பட்டவர்களுக்கான சர்வதேச நான்கு முனை கிரிக்கெட் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற இலங்கை அணியினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கிரிக்கெட் குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி, அவர்களுடனான கூட்டுப் புகைப் படத்திலும் தோன்றினார். (க)



# இலங்கை வரலாற்றில் முதன் முறையாக அதிகூடிய நேரடி வெளிநாட்டு முதலீடுகள்

## சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவிப்பு

கொழும்பு, மே 24

வரலாற்றில் முதன் முறையாக அதிகூடிய நேரடி வெளிநாட்டு முதலீடுகள் கடந்த வருடத்தில் பதிவாகியுள்ளன என அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் 1.9 பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப்பெற்றன.

இந்த நிலைமை நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு பாரிய உந்துசக்தியாக அமைந்திருந்தது. இந்த வருடத்தில் இந்த முதலீடுகளை 2.9 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

அடுத்த மாதத்துக்குள் ஒரு



பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கிறோம் என்றும் அமைச்சர் சமரவிக்ரம நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மூலோபாய அபிவிருத்தி செயற்றிட்டச் சட்டமூலத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட இரண்டு நிலையியற் கட்டளைகள் தொடர்பில் இடம்பெற்ற விவாதத்தின் போதே அமைச்சர் மலிக் சமரவிக்ரம இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொருளாதார அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

சிங்கப்பூர் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும் வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் நாட்டின் ஏற்றுமதித் துறை பன்முகப்படுத்தப்படும்.

இதன் மூலம் ஏற்றுமதி துறை சார் உற்பத்திகளை மேலும் விரிவுபடுத்தலாம் என்று அமைச்சர் மலிக் சமர விக்ரம சுட்டிக்காட்டினார்.

# பெருந்தோட்டப் பாடசாலை அதிபர்களின் பயிற்சிப்பட்டறை ஒத்திவைப்பு!

கொழும்பு, மே 24

இம்மாதம் 24, 25 ஆகிய இருதினங்களில் ஹற்றன் சீடா மத்திய நிலையத்தில் நடைபெறவிருந்த பெருந்தோட்டப் பாடசாலை அதிபர்களின் பயிற்சிப்பட்டறை பிற்போடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் பெருந்தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவால் நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா, ஹங்குரன்கெத்த மற்றும் வலப்பனை கல்வி வலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தோட்டப் பாடசாலை அதிபர்களுக்காக 24 மற்றும் 25 ஆகிய திகதிளில் ஹற்றன் சீடா கல்வி அபிவிருத்தி மத்திய நிலையத்தில் நடைபெறவிருந்த செயலமர்வு தற்போதைய சீரற்ற கால நிலையால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி பட்டறை நடைபெறும் தினம் எதிர்வரும் காலங்களில் அறிவிக்கப்படும் என கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8மணியிலிருந்து மாலை 5 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

விநாயகபுரம், இயக்கச்சி, முகாவில், மல்வில், இயக்கச்சி இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

சிதம்பரபுரம், கற்குளம், ஆசிகுளம், ஆச்சிபுரம், எல்லப்பர்மருதங்குளம், கூமர சங்குளம், குடாகச்சகொடிய, மகாமயிலங் குளம், துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# பொலிஸாரின் அறிவுறுத்தலை மீறியவர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளார்



கொழும்பு, மே 24

சிலாபம் – கொழும்பு வீதியில் மாதம்பே என்ற இடத்தில் பெருக்கெடுத்திருந்த வெள்ளத்தின்ஊடான பாதையில் பயணிக்க வேண்டாம் எனப் பொலிஸார் வழங்கிய ஆலோசனையைகவனத்தில்கொள்ளாது மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் அந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

பின்னர் இந்த இடத்திலிருந்த மாதம்பே பொலிஸாரும் பிரதேச இளைஞர்கள் சிலரும் நீரில் அடித்துச்செல்லப்பட்டவரை மீட்டுள்ளனர். இருப்பினும் அவரது மோட்டர் சைக்கிள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

# மரக்கறிகளின் விலை அதிகரிப்பு!



தற்பாது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பு மெனிக் சந்தையில் மரக்கறிகளின் விலை 30 வீதத்தால் அதிகரித்திருந்தது என மெனிக் சந்தை வர்த்தக சங்கத்தின் செயலாளர் காமினி ஹந்துன்கே தெரிவித்துள்ளார்.

மலையகப்பகுதிகளில் மரக்கறிகளின் விலை 50 வீதத்தால் அதிகரித்துள்ளது என அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். இதேவேளை தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை 30 வீதத்தால் அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க இரத்தினபுரியின் மின்சாரம் துண்டிப்பு

கொழும்பு, மே 24

இரத்தினபுரி மாவட்டத்தின் சில பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது என மின்சார சபை அறிவித்துள்ளது.

இயற்கை அனர்த்தங்களான மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப் படும் பிரதேசங்களில் பொது மக்களுக்கு மின்சாரக் கசிவு போன்ற ஆபத்துக்கள் ஏற்படலாம் என்று கருதியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குருவிட்ட, எலபாத்த, கிரி யெல்ல, எஹலியகொட ஆகிய நகரங்களுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் நாள்களில் நிலைமை அடையவுள்ள தீவிரத்தின் அடிப்படையில் இன்னும் சில பிரதேசங்களில் மின்சாரம் துண்டிக்கப்படலாம் என்று அறியக் கிடைத்துள்ளது.

மழைக்கால அனர்த்தங்கள் படிப்படியாகக் குறைந்த பின்னரே இந்தப் பிரதேசங்களுக்கான மின்சார விநியோகம் மீண்டும் இணைக்கப்படும் என்றும் மின்சாரசபை அறிவித்துள்ளது. (கு)

# தொழிற்சங்க நடவடிக்கையிலிருந்து விலகுமாறு மின்சாரசபை பொறியலாளர்களுக்கு அறிவிப்பு!

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார சபைப் பொறியியலாளர்களைச் சட்டப்படி பணி என்ற தொழிற்சங்க நடவடிக்கையிலிருந்து விலகிக்கொள்ளுமாறு மின்சாரசபைப் பொறியியலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

மின்சாரசபையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நீண்ட காலப் பொதுமக்கள் நலனுக்கான திட்டத்தைப் பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு நிராகரித்தமைக்கு எதிர்ப்பு தெரி விப்பதற்காக மின்சார சபைப் பொறியியலாளர் சங்கம் கடந்த இரண்டு வாரங்களாக இந்தச் சட்டப்படி பணி என்ற தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள 14 மாவட்டங்களைச் சேர்ந்த மின்சாரசபை பொறியியலாளர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தொழிற்சங்க நடவடிக்கையிலிருந்து விலகிக்கொள்ளுமாறு மின்சாரசபைப் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ஏனைய மாவட்டங்களில் இந்த தொழிற் சங்க நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடுவலை பாலத்தின் ஊடான போக்குவரத்து இடைநிறுத்தம்

கொழும்பு, மே 24

பியகம- கடுவலையை இணைக்கும், களனி கங்கையை ஊடறுத்து நிர்மாணிக்கப்பட்டுள்ள, கடுவலை பாலம் ஆபத்தான நிலையில் உள்ளமையால் அந்த பாலத்தின் ஊடான போக்குவரத்து முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்தப் பாலத்தின் நிலைமையைச் சோதனைக்கு உட்படுத்துவதற்காக, பொறியியலாளர் குழுவொன்று அவ்விடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று அதிகார சபையின் தலைவர் நிஹால் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

## தினசரி ராசி பலன் (24.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை தசமித் திதி மாலை 6.18 மணி வரை பின்னர் ஏகாதசி. நட்சத்திரம்: உத்தரம் இரவு 7.45 மணி வரை. பின்னர் அத்தம். மரணயோகம் இரவு 7.45 மணி வரை பின்னர் சுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 1.41 மணி முதல் 3.15 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.22 மணி முதல் 8.52 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - வைகாசி மாத வளர்பிறை தசமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - உத்தரம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். இது நாள் வரை தடைப்பட்டிருந்த நல்ல விஷயங்கள் எல்லாம் சுபமாக முடியும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**ரிஷபம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். தந்தை வழி உறவுகள் மேம்படும். தந்தை வழிச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

**மிதுனம்** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் பிரச்சினை உண்டாகும். யாருக்கும் தேவையில்லாமல் வாக்குக் கொடுக்க வேண்டாம். கடன் வாங்குவதைத் தவிர்க்கவும்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். உறவினர்களால் குடும்பத்தில் விரிசல் உண்டாகும். தேக சுகம் பாதிப்படையும். வழக்கு விவகாரங்கள் இழுபறி நிலையில் இருக்கும்.

**சிம்மம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் நிம்மதி நிலவும். பெற்றோர், பிள்ளைகளிடையே அந்நியோன்யம் வளரும். சகோதர உறவு வலுவடையும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும்.

**கன்னி** சுபீட்சமான நாள். தனலாபம் பெருகும். வீடு, காணி, வாகனம் என்று புதுச்சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுபநிகழ்ச்சிகள் நடக்கும். வியாபாரம் செழித்தோங்கும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும்.

**துலாம்** சஞ்சலமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். வியாபாரத்தில் போட்டியாளர்களால் சில சங்கடங்கள் உண்டாகும். குடும்பத்தில் யாருக்கேனும் மருத்துவச் செலவுகள் உண்டாகலாம்.

**விருச்சிகம்** மகிழ்ச்சியான நாள். பணம் தாராளமாப் புழங்கும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி அதிகரிக்கும். வேலைக்குப் போகும் பெண்கள் எதிர்பாராத சம்பள உயர்வைப் பெறுவார்கள்.

**தனுசு** சஞ்சலம் மிகுந்த நாள். வருமானம் குறையும். குடும்பச் செலவைச் சமாளிக்க முடியாமல் தடுமாற்றம் உண்டாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும்.

**மகரம்** மகிழ்ச்சியான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட காலம் காணாதிருந்த சகோதரர்களைக் கண்டு மகிழ்வார்கள். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் வலிய வந்து சேர்வார்கள்.

**கும்பம்** குழப்பமான நாள். மனதில் ஒரு வித கவலை, யோசனை உண்டாகும். தொழிற் பிரிவினருக்கு உழைப்பு மிகுதியான இருக்கும். வியாபாரம் குறைந்த பட்சம் லாபம் தரக் கூடிய அளவில் நடைபெறும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் முன்னேற்றமடையும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். இதுவரை வாட்டி வதைத் நோய்கள் நீங்கி ஆரோக்கியம் அடைவார்கள். செய்யும் தொழில் விருத்தியடையும்.

சந்திராஷ்டம நாள்: அவிட்டம் 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1 ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# ஊவா மாகாணத்தில் அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம்!



கொழும்பு, மே 24

ஊவா மாகாணத்தில் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சால் செயற்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இது இடம்பெற்றது.

பதுளை, தெமோதர, ஹாலி எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டங்கள் உள்ளிட்ட பல முக்கிய செயற்திட்டங்கள் தொடர்பாக இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் டி.ஜி.எம்.வீ. ஹப்புஆராச்சி, அமைச்சரின் பிரேத்தியகச் செயலாளர் எம். நயீமுல்லாஹ், தேசிய நீர் வழங்கல் வடிகாமைப்பு சபையின் தலைவர் கே.ஏ. அன்ஸார், பிரதித் தலைவர் எம்.எச்.எம். சல்மான் உள்ளிட்ட உயரதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# 2.39 கிலோ ஹெரோயினுடன் மாலைதீவுப் பிரஜை கைது!

கொழும்பு, மே 24

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 2.39 கிலோகிராம் ஹெரோயினுடன் மாலைத்தீவுப் பிரஜை ஒருவரை நேற்றுக் காலையில் தாங்கள் கைது செய்துள்ளனர் என விமான நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாலைதீவில் இருந்து விமானம் மூலம் இலங்கைக்கு வந்த மாலைதீவுப் பிரஜை ஒருவரைப் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு நேற்று அதிகாலையில் சோதனையிட்டபோது சூட்சுமமான முறையில் 2.39 கிலோகிராம் ஹெரோயினை எடுத்து வந்தமை கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் இவரைக் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்டவர்களின் உணவுத் தேவைக்கு ரூ.2 கோடி 70 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது

கொழும்பு, மே 24

பாதிக்கப்பட்டவர்களின் உணவுத் தேவைக்காக 2 கோடியே 70 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் அமல் நாதன் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ள ஆறு மாவட்டங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக முப்படையைச் சேர்ந்த ஐயாயிரம் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஜின் கங்கையின் நீர் மட்டம் உயர்ந்துள்ளமையினால், காலி மாவட்டத்தின் நாகொட, வெலிவிட்டிய, திவித்துர, பத்தேகம, போப்பே, பொத்தல பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள தாழ்நிலங்களும், வீதிகளும் நீரில் மூழ்கியுள்ளன.

அவசர நிலைக்கு முகங்கொடுக்கத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் காலி மாவட்ட உதவிப் பணிப்பாளர் தம்பத் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

# மண்டைதீவு படைமுகாம் காணியின் உரிமையாளர்கள் தொடர்பு கொள்க

## மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 24

மண்டைதீவில் இராணுவ முகாம் அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மண்டைதீவின் நன்னீர் வளமுள்ள பகுதியில் சுமார் 18 ஏக்கர் பரப்பளவில் இராணுவ முகாம் அமைந்துள்ளது. இதன் உரிமையாளர்களான மக்கள் பல இடங்களிலும் வசித்து வருகின்றனர். இந்நிலையில் மேற்படி காணிகளை நிரந்தரமாகக் கைப்பற்ற இராணுவத்தினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதையடுத்து மண்டைதீவுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விஜயம் ஒன்றை மேற்கொண்ட வடமாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் விந்தன் கனகரத்தினம் ஆகியோர் அப்பகுதியின் கிராம சேவகர் மற்றும் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர், உரிமையாளர்களின் சரியான விவரங்கள் இன்மையால், உரிய உரிமையாளர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அவர்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுவரை 29 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் எஞ்சியோரை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

மண்டைதீவிலேயே மேற்படி பகுதியில் மட்டும்தான் நன்னீர் வளம் காணப்படுவதாகவும், அதனாலேயே இராணுவத்தினர் மேற்படி பொதுமக்களின் காணிகளை அபகரிக்க முயல்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ள வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், மேற்படி காணிகளை இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றும் பொருட்டு உரிமையாளர்கள் தம்மை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# தம்மைக் கைது செய்வதைத் தடுப்பதற்காக கோட்டாபய பெரும் நிதியைச் செலவிடுகிறார்

**அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்**



கொழும்பு, மே 24

தம்மைக் கைது செய்வதைத் தடுப்பதற்கான நீதிமன்றத்தின் உத்தரவைப் பெறுவதற்காக கோட்டாபய ராஜபக்ஷ எதற்காக சட்டவாளர்களுக்கு மில்லியன் கணக்கான ரூபாவைச் செலவிடுகிறார் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றங்களில் பல வழக்குகள் உள்ளன. தாம் தவறு செய்யவில்லை என்றால், நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும்.

கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு முறையற்ற விதத்தில் இராஜதந்திரக் கடவுச் சீட்டை பெற்றுக் கொடுத்தமை, நேசன் இதழின் ஆசிரியர் கீத் நொயார் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டமை, ரிவிர ஆசிரியர் உபாலி தென்னக்கோன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கப்பட்டமை, சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமது சிங்க இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் படுகொலை செய்யப்பட்டமை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை, வெலிக் கடைச் சிறையில் 26 கைதிகள் படுகொலை செய்யப்பட்டமை, வெலிவேரியவில் ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை என்று கோட்டாபய ராஜபக்ஷ பல வழக்குகளில் சந்தேகநபராக குறிப்பிடப்பட்டுள்ளார்.

நாங்கள் ஒன்றும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறவில்லை. இந்த இராணுவ அதிகாரிகளுக்கு மக்களின் மீது எந்த விரோதமும் இல்லை. அவர்கள் கட்டளைகளைப் பின்பற்றி வந்தவர்கள்.

இவற்றுக்குப் பின்னால் கோட்டாபய ராஜபக்ஷவே இருந்தார் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்.

அவன்ட் கார்ட் பேரம், ராஜபக்ஷ நினைவிடம், மிக் பேரம் போன்ற ஊழல்களிலும் தொடர்புடையவர். பிரித்தானியாவில் உள்ள நிறுவனம் ஒன்றின் மூலம், மிக் பேரத்தின் மூலம், 78 லட்சம் டொலரைத் திருடியவர்.

அவரது பெற்றோர் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். ஆனால், திருடப்பட்ட பணத்தில் அல்ல. அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் தமது பிள்ளையின் இந்தச் செயலுக்காக மிகவும் அதிர்ச்சியடைந்திருப்பார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலகட்டத்தில், நான் சென்று தம்மைச் சந்தித்தேன் என கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருக்கிறார். அது பொய்.

2014 ஆம் ஆண்டு ஒக்டோபரில், கோட்டாபய உள்ளிட்ட ராஜபக்ஷக்கள், என்னைச் சந்திக்க வேண்டும் என்று கேட்டனர். அவர்களுக்குத் தேவையிருந்தால் என்னை வந்து சந்திக்கலாம் என்று கூறினேன். மஹிந்த ராஜபக்ஷ எனது வீட்டுக்கு வந்தார்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நதிகளின் நீர்மட்டம் படிப்படியாக குறைவு!



நதிகளின் நீர் மட்டம் படிப்படியாகக் குறைந்து வருகின்றது என நீர்ப்பாசனத் திணைக்களத் தெரிவித்துள்ளது.

இருப்பினும் களனி கங்கையின் நீர்மட்டம் நாகலகன் வீதிய என்ற இடத்திலேயே தொடர்ந்து அதிகமாகக் காணப்படுகின்றது.

இதேவேளை, ஹங்வெல பிரதேசத்தில் அனர்த்தத்தை ஏற்படுத்தியிருந்த வெள்ளம் குறைவடைந்துள்ளது.

ஜின்கங்கையின் நீர்மட்டம் பத்தேகம என்ற இடத்திலேயே தொடந்தும் கூடுதலாக காணப்படுகின்றது என்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தவலம என்ற இடத்தில் ஜின் கங்கையின் நீர்மட்டம் வழமையான நிலையில் காணப்படுகின்றது. இதேவேளை, நில்வள கங்கையில் பாணதுகம என்ற இடத்தில் வெள்ளம் படிப்படியாக குறைந்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மகாஓயா மற்றும் அத்தனகளு ஓய நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருகின்றது என நீர்ப்பாசனத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## மண்சரிவு அபாயம் காரணமாக 340 பேர் முகாமில் தங்க வைப்பு!





நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக கொத்மலை வெதமுல்லை லில்லிஸ்டாண்ட் தோட்டத் தின் 105 குடும்பங்களைச் சேர்ந்த 340 பேர் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக கொத்மலை பிரதேசத் துக்குட்பட்ட வெத முல்லை தோட்டம் லில்லிஸ் டாண்ட் பிரிவில் மண் சரிவு அச்சம் காரணமாக 105 குடும்பங்களைச் சேர்ந்த 340 பேர் இந்த வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு தற்காலிகமாக இறம்பொடை இந்துக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான முதற்கட்ட நிவாரணங்களை கிராம சேவகர் ஊடாக கொத்மலை பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைப் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

தோட்டப் பொது மக்கள், தோட்ட நிர்வாகம் அரசியல்வாதிகள், நலன் விரும்பிகளும் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மட்டுப்படுத்தப்பட்ட களனி வெளி ரயில் போக்குவரத்து!

கொட்டாவ பகுதியில் ரயில் பெட்டிகள் தடம் புரண்டுள்ளமையைத் தொடர்ந்து களனி வெளிமார்க்கத்திலான ரயில் போக்குவரத்து தொடர்ந்தும் மஹரகம வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தடம்புரண்ட ரயில் பெட்டிகளை மீண்டும் தண்டவாளத்தில் நிறுத்தும் பணிகள் இன்னும் நிறைவடையவில்லையென பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த ரயில் ஒன்றின் மூன்று பெட்டிகள் தடம் புரண்டன.

இதனிடையே, தும்மோதர பகுதியில் புத்தளம் மார்க்கத்தில் ரயில் போக்குவரத்து லுணுவில வரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தப் பாதை நீரில் மூழ்கியுள்ளதால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (க)

## வீதியோர சித்திரக் கலைஞர்களுக்கு ஜனாதிபதி மைத்திரி நிதி அன்பளிப்பு!



கொழும்பு, மே 24

கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் கலை நயமிக்க படைப்புக்களை உருவாக்கிவரும் வீதியோரச் சித்திரக் கலைஞர்களின் எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நிதி அன்பளிப்பு செய்யப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுய முயற்சியோடு முன்னேறுவதற்காக போராடிக் கொண்டிருக்கும் வீதியோரச் சித்திரக் கலைஞர்களுக்கு உறுதுணையாக அவர்களுக்கு உரிய கௌரவத்தை வழங்கும் பொருட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கேற்ப தற்போதைய அரசால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத் தையிலுள்ள வீதியோர சித்திரக் கலைஞர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட காட்சிப் பலகையும் அண்மையில் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

காலைக்கதிர் Kalaikkathir



# மீண்டும் வெள்ளத்துக்கு முகம் கொடுக்கும் இக்கட்டில் இலங்கை!



இலங்கையில் கடந்த சில மாதங்களாக வறட்சியான காலநிலை நீடித்து வந்ததைத் தொடர்ந்து, கடந்தசில தினங்களாக கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை மீண்டும் ஏற்பட்டு பல பகுதிகளை வாட்டியும் வதைத்துக் கொண்டிருக்கின்றது. வளிமண்டத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாகவே சில தினங்களாக சீரற்ற காலநிலை நீடித்து வருகின்றது. இக்காலநிலையின் விளைவாக மழையுடன் கூடிய காலநிலை நாட்டில் நிலவுகின்றது.

இதன் விளைவாக 14 மாவட்டங்களில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதோடு 52 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 1500 பேர் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர். மழை, மண்சரிவு காரணமாகப் பத்துப் பேர் வரை உயிரிழந்தும் உள்ளனர்.

இவ்வாறான நிலையில், 'வெள்ளம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களுக்கு வேடிக்கை பார்க்க செல்ல வேண்டாம்' என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதேவேளையில், 'மழை காலநிலை அடுத்தவரும் சில நாள்களுக்கு நீடிக்கும்' என்று வளிமண்டல வியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ந்தும் மழை பெய்யுமாயின் மண்சரிவுஅபாயம் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்கள் விழிப்பாக இருக்குமாறும், பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனமும் முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

இதேநேரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இச்சீரற்ற காலநிலை



ஏற்படுத்தியுள்ள விளைவுகள் தொடர்பில் கவனம் செலுத்தி பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனுக்குடன் நிவாரணம் வழங்கத் தேவையான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வழங்கியுள்ளனர். அந்தந்த மாவட்ட செயலகங்களுக்கு நிதியொதுக்கீடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டின் சீரற்ற காலநிலையைக் கருத்தில் கொண்டு மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக 24 மணித்தியாலயமும் தயார் நிலையில் இருக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முப்படையினருக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாகத் தோற்றம் பெற்றுள்ள நிலைமைக்கு முகம் கொடுக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சந்தர்ப்பத்தில் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மழைநீர் வழிந்தோடுவதற்கு தடையாக அமைக்கப்பட்டுள்ள நிர்மாணங்களையும் கட்டடங்களையும் அப்புறப் படுத்துமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கி இருக்கின்றார்.

நாட்டில் அண்மைக் காலமாக சிறிதளவு மழை பெய்தாலும் வெள்ள நிலைமை ஏற்படுவது வழமையாகி விட்டது. இவ்வாறான நிலைமைக்கு இந்நாடு முன்னொரு போதுமே முகம் கொடுக்கவில்லை. இப்போது இந்நிலைமை ஏற்பட முக்கிய காரணம் மழைநீர் வழிந்தோடவென இயற்கையாக அமைந்திருந்த வடிகான்களும், கால்வாய்களும், சதுப்பு நிலங்களும் நிரப்பப்பட்டு கட்டடங்கள் அமைக்கப்பட்டமையாகும். இதன் விளைவாக மழை நீர் சீராக வடிந்தோட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் சிறு மழையும் கூட பெருவெள்ள நிலையை ஏற்படுத்தி விடுகின்றது.

மேலும் மழைநீர் தேங்கும் இடங்களில் நுளம்புகள் பல்கிப் பெருகும் நிலைமை ஏற்படும். அவற்றின் ஊடாக நுளம்புகள் பரப்பும் நோய்கள் குறிப்பாக டெங்கு நோய் தீவிரமடையும். அத்தோடு மழைநீர் தேங்கிநிற்கும் இடங்களில் சில தோல் நோய்களும் கூட பரவ முடியும்.

மழைநீர் சீராக வடிந்தோடும் வடிகான்களும், கால்வாய்களும், சதுப்பு நிலங்களும் நிரப்பப்பட்டு கட்டட நிர்மாணங்கள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாகவே இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் சுற்றாடல் துறை நிபுணர்களும் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளனர்.

இருந்தும் மழைக் காலங்களில் வெள்ள நிலைமை ஏற்படும் போது வடிகான்களும், சதுப்பு நிலங்களும் நிரப்பப்பட்டு அமைக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள், நிர்மாணங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். வெள்ளநீர் வழிந்தோடிய பின்னர் அது தொடர்பில் எவரும் கவனம் செலுத்தாத நிலைமையே காணப்படுகின்றது. இதனை அதிகாரிகள் கூட வசதியாக மறந்து விடுகின்றனர்.

ஒரு சிலர் செய்யும் தவறானதும் பிழையானதுமான செயற்பாடுகளால் பெரும் பாலான அப்பாவி மக்கள்தான் பாதிக்கப்படுகின்றனர். இதில் எவ்விதத்திலும் நியாயம் காண முடியாது. அவர்கள் சில சமயம் இருப்பிடங்களை விட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களில் தங்கும் துரதிர்ஷ்ட நிலைமைக்கும் கூட முகம் கொடுக்கின்றனர். இந்நிலைமை மாறவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

ஆகவே மழைநீரின் சீரான வடிந்தோடலுக்கு இடையூறாக அமைக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாணங்கள் மாத்



திரமல்லாமல் எதிர்காலத்தில் அமைக்கப்படும் கட்ட நிர்மாணங்கள் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விடேட கவனம் செலுத்த வேண்டும். இது விடயத்தில் பக்கச்சார்பற்ற வகையில் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியம். அவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாகவே இப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும்.

அப்போது சீரற்ற காலநிலையால் மக்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்களையும், அசௌகரியங்களையும் ஒன்றில் தவிர்த்து கொள்ளவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ முடியும். இவ்விடயம் தொடர்பில் மக்கள் மத்தியிலும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். அப்போது இயற்கை அமைப்புக்கு, குறிப்பாக மழைநீர் சீராக வடிந்தோடுவதற்கு இடையூறு ஏற்படுத்தப்படும் வகையில் இடம்பெறும் நடவடிக்கைகளையும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கடந்த ஐந்து வருடகாலமாக காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் கடுமையான காலநிலைகளுக்கு மாறிமாறி இலங்கை முகங்கொடுத்து வருகின்ற போதும் அரசாங்கம் இது தொடர்பாக போதிய அக்கறையைச் செலுத்தவில்லை. பாதிப்புநடந்தபின்னர் பரிகாரம் செய்யும் முயற்சிகளே நடக்கின்றனவே தவிர பாதிப்புக்கள் ஏற்பட முன்னர் அதனைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைக் காணமுடியவில்லை. இனியேனும் தாமதிக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிஉதவியுடன் மட்டக்களப்பில் வறுமையை ஒழிக்கும் திட்டம்!

கொழும்பு, மே 24

ஐரோப்பிய ஒன்றியத்தின் 46 கோடி ரூபா நிதியுதவியில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய ஸ்தாபனத்தின் உணவு விவசாய நிறுவனத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட விவசாயத்தினூடாக வறுமையை ஒழிக்கும் அபிவிருத்தி திட்டத்தின் முன்னேற்றங்களைப் பகிர்ந்து கொள்ளும் விசேட நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு ஈஸ்ட் லங்கா சுற்றுலா விடுதியில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்ட அரச அதிபர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இத்திட்டத்துடன் சார்ந்த அரச திணைக்களங்கள் பிரதேச செயலாளர்கள், இத் திட்டத்தில் பயன் அடைந்த பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த ஐந்து வருடமாக அமுல்படுத்தப்பட்ட இந்த விசேட திட்டத்தில் விவசாயம், கால்நடை உற்பத்தி,



நன்னீர்மீன் வளர்ப்பு, சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி உட்பட பல துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும், வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களில் சுமார் 7000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன..

இந்தத் திட்டத்தில் பழப் பயிர்ச்செய்கை, கச்சான் பயிர் உற்பத்தி, விதை நெல் உற்பத்தி, நன்னீர் மீன் வளர்ப்பு உற்பத்தி, சிறிய நீர்ப்பாசன புனருத்தாரணம், கருவாடு உற்பத்தி உட்பட பல துறைகளில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அரச தகவல் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவு தகவல் தெரிவிக்கின்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் எம்.உதயகுமார், உலக விவசாய நிறுவன திட்ட முகாமையாளர் திருமதிரோகினிசிங்கராயர், கிழக்கு மாகாணப்பணிப்பாளர் கபில விக்ரமசிங்க, இந்நிறுவனத்தின் விவசாய அபிவிருத்தி அதிகாரி ஜூட் கிரிசாந், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ் செழியன் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# அதிசயக் கோயில் அங்கோர்

**அத்தியாயம் - 02**



**கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்**





**கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து எட் டாம் நூற்றாண்டு வரை**

வரலாற்றுக் காலத்துக்கு முந்திய காலத்தின் சமூகத்தில் தோன்றிய நாக ரிகம் மேலும் வளர்ச்சி அடைந்தது. கி.பி. முதல் நூற்றாண்டில் கடற்கரைப் பகுதியிலும் பள்ளத்தாக்குகளிலும் குழுக்களாக வாழ்ந்த மக்கள் நெல் விளைவித்தனர், மாடுகள் வளர்த்தனர். சமையல் பாத்திரங்களை மண்ணால் செய்தனர். உலோகங்களைப் பயன்படுத்துவதிலும் திறமை பெற்றவர்களாக விளங்கினர். இவர்கள் ஆவி வழிபாட்டை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் தங்கள் நிலத்தின் ஆவிகளையும் மூதாதையர்களையும் வணங்கினர்.

இந்தியாவோடு தொடர்பு கொள்ள இருந்த லாபகரமான வழித்தடத்தை மத்திய ஆசியாவிலுள்ள நாடோடி இனத்தவர் தடுத்து நிறுத்தியமையால், ஆரம்பக் கால கிறிஸ்துவ சகாப்தத்தில் சீனர்கள் தங்கள் வியாபாரத்துக்கான புதிய பாதைகளைத் தேடி கடல் மூலம் தெற்குச் சமுத்திரத்திலுள்ள நாகரிகம் அற்ற நிலப்பகுதிக்கு பயணம் செய்தனர். வியாபார நிமித்தமாக இந்தியாவும் சீனாவுடன் கடல் வழி வியாபாரத் தொடர்பு கொள்ள கிழக்கில் ஈடுபட்டது.

தொடக்கத்தில் கடற்கரையை ஒட்டியும் தென்கிழக்குப் பகுதியை ஒட்டியும் இயங்கிய கப்பல்கள் விரைவாக இந்திய – சீனா கடல்வழிப் பாதையில் அறிமுகமாயின. ஆரம்பத்தில் கப்பல்கள் இந்தியாவின் கிழக்குக் கரையிலிருந்து மேற்குக் கடற்கரையாகிய மலாய் தீபகற்பம் வரை சென்றன. அங்கிருந்து பொருள்கள் தரை மார்க்கமாக க்ராவின் கிஸ்த்மன் பக்கத்திலிருந்து மேற்குக் கடற்கரை தாய்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. பிறகு வளைகுடாப் பகுதியைத் தொடர்ந்து சீனாவின் தெற்குப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

கப்பல் கட்டும் திறமை, கப்பல் பயணத் திறமை, தட்ப வெப்ப சூழ்நிலை ஆகியவற்றால் தென்கிழக்கு ஆசியா வழியாக இரண்டு நாடுகளுக்கு இடையில் கடல்வழி வியாபாரம் வேகமான வளர்ச்சியை அடைந்தது.

துறைமுகத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதியில் குடியிருப்புகள் தோன்றியதால் வியாபாரப் பாதைகள் அதிகமாக உருவாகின.

இந்தியாவிலிருந்து மதம், சமூகம் சார்ந்த கருத்துகள் பிராமண பூசாரிகள் மூலம் தென்கிழக்கு ஆசியப் பகுதிக்குச் சென்றன. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன ஆவணங்கள், பூனன் என்ற பகுதியே தென்கிழக்கு ஆசியாவில் முதல் முதலாக இந்திய மயமாக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. இப்பகுதி கம்போடியாவின் தென்கிழக்குப் பகுதி



மற்றும் தெற்கு வியாட்நாமிற்கும் உள்ள மீகாங் டெல்டா பகுதியில் அமைந்திருந்தது. இங்கே வாழ்ந்தவர்கள் மோன் – க்மெர் குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது. பூனன் பூகோள ரீதியாகவும் மொழி ரீதியாகவும் கம்போடியாவுடன் தொடர்பு கொண்டிருந்தது.

பூனன் என்ற பெயர் க்மெர் சொல்லான ப்னாம் என்பதின் சீன மொழி பெயர்ப்பாக இருக்கலாம். க்மெர் என்றால் மலையென்று பெயர் (இன்றைய க்மெர் சொல்லும் மலையையே குறிக்கிறது).

பூனன் தோன்றிய புராணக் கதையை சீனாவின் ஆவணம் குறித்து வைத்ததை பிற்காலத்தில் அந்தக் கதை சமஸ்கிருத்திலும் க்மெர் மொழியிலும் சொல்லப்பட்டன. இந்தப் புராணக்கதைக்கும், க்மெரின் தோற்றத்துக்கும் உள்ள தொடர்பும், கம்போடிய நாட்டின் மன்னர்களின் பரம்பரை பற்றிய வரலாறு முழுவதும் புராணக் கதைகளில் உள்ளன. இந்தக் கதைகள் குறித்துப் பல்வேறு தொகுப்புகள் இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி மட்டும் பின்பற்றப்பட்டு வருகிறது. வெளி நாட்டவருக்கும் உள்ளூர் இளவரசிகளுக்கும் இடையில் நடைபெறும் திருமணத்தின் மூலமே இந்தச் சந்ததியினர் தோன்றினர். ஒரு நாள் நாகர்களின் மன்னனின் மகள் கம்போடிய கடற்கரையோரத்தில் படகில் இருந்த இளவரசனைப் பார்த்தாள். உடனே ஒரு சிறிய படகில் ஏறி அவனைச் சந்திக்கச் சென்றாள். அவளைப் பார்த்ததும் இந்து இளவரசன் தனது மந்திரவில்லை எடுத்து அவளுடைய படகின் மீது அம்பைத் தொடுத்தான். அவனுடைய திறமையைக் கண்டு அந்தப் பெண் இந்து இளவரசனை மணந்து கொண்டாள். தனது மகளின் சீதனமாக கம்போடிய நாட்டையும் தலைநகரையும் கட்டி அவர்களுக்கு மன்னன் பரிசளித்தான். தலைநகருக்கான நிலத்தைக் குறித்துக்காட்ட இளவரசன் ஈட்டியை எறிந்ததாக இன்னொரு கதையும் உண்டு. இந்த நாட்டின் பெயர் கம்போஜா என்று மாற்றம் கொண்டது.

கிறிஸ்துவ காலத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் இந்தியச் சிந்தனைகள் பூனான் பண்பாட்டில் ஒன்றிக் கலந்தன. ஐந்தாம் நூற்றாண்டில் ஒரு புதிய பாதிப்பு, பூனானின் ஆட்சி இந்து மன்னரால் ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்தில் இந்தியக் கருத்துக்கள் தென்கிழக்கு ஆசியாவில் நிலைநாட்டப்பட்டு இந்து மதமும் புத்த மதமும் அறிமுகம் செய்யப்பட்டன. நீதி மன்றங்களில் சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தியதால் எழுதுவது அறிமுகமாகி முதல்முதலாக கல்வெட்டுகளும் தோன்றின. சோதிடம், நீதிமுறை, இலக்கியம் மற்றும் உலகளாவிய ஆட்சி முறை குறித்த சிந்தனைகளும் பண்பாட்டில் ஒன்றிக் கலந்தன.

பூனான் மாநிலத்தின் நிலைத்தத் தன்மையை உள்நாட்டுப் போர்கள் பாதித்தன. உள்நாட்டு அரசில் மையம் மாற்றப்பட்டது. ஆறாம் நூற்றாண்டு மத்தியில் சென்லா (ஜென்லா) என்ற புதிய மாநிலம் தோன்றியதாக சீன ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

பூனானை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து ஆட்சி அதிகாரத்தை அடுத்த 200 ஆண்டுகள் ஜென்லா செலுத்தியதாகத் தெரிகிறது. எட்டாம் நூற்றாண்டில் தீவிரப் போட்டியினால் ஜென்லா இரண்டாகப் பிரிந்ததாக சீன ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. ஜென்லா நாட்டின் மேல் பகுதி தெற்கு லாவோசின் மேற்புறத்தில் இருந்த மீக்காங்கில் அமைந்தது. தொடக்கத்தில் இருந்த ஜென்லாவின் பகுதி டோன்லே சப் ஏரியின் வடக்குக் கரையோரம் அமைந்திருந்தது.

எட்டாம் நூற்றாண்டு முழுவதும் மாநிலங்களில் நிர்வாக மையங்களை ஏற்படுத்தி ஜென்லா இயங்கியது. டோன்லே சப் ஏரியின் கிழக்குப் பகுதியில் இசனபுராவை (சாம்பூர் பெரிகுக்) தலைநகரமாகக் கொண்டு கீழ் ஜென்லா இயங்கியது. மேல் பகுதியைப் போல் அல்லாமல் சிறிய அளவில் ஒருங்கிணைக்கப் பட்டு சின்னச் சின்ன மாநிலங்களை உள்ளடக்கியதாக விளங்கியது. மேக்காங் பள்ளத்தாக்கில் இருந்த முந்தைய பூனான் நகரமும் இதில் இணைந்திருந்தது. ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பூனான் வீழ்ச்சி அடைந்த காலம் கம்போடியா வரலாற்றில் அங்கோரின் முந்தைய காலம் என்று அறியப்படுகிறது.

கெமர் நாகரிகத்துக்கு முன்பே பூனான் மற்றும் ஜென்லா ஆகிய மாநிலங்கள் இருந்தன என்று மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இந்த மாநிலங்களைப் பற்றிய தகவல் அனைத்தும் முழுக்க முழுக்க சீனாவையே சார்ந்திருக்கின்றன. இவை இருந்ததற்கான பூகோள ரீதியாகவும் தொல்பொருள் ஆராய்ச்சி ரீதியாகவும் எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. மேலும் இந்த இரண்டு மாநிலங்களின் பெயர்கள் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளிலும் காணப்படவில்லை. கெமர் மொழியிலும் எந்தவிதக் குறிப்புகளும் இல்லை. கம்போடியாவில் சேர்ந்திருந்த பல மாநிலங்களில் பூனான், ஜென்லா ஆகியவை முக்கியமான மாநிலங்களாக இருந்தன. சீனாவிற்குக் கப்பம் செலுத்தும் விதமாக அவைகள் தம்மை அரசுகளாக அழைத்துக் கொண்டிருக்கலாம் எனச் சரித்திர ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

**கி.பி. 811இல் கம்போடியா**

இரண்டாம் சூரியவர்மன் உலகப் பெருங்கோயில் அங்கோரைக் கட்டுவதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த, சூரியவர்மனின் மூதாதையரில் ஒருவரான இரண்டாம் ஜெயவர்மனே முதலாவது கெமர் சாம்ராஜ்ய மன்னனாவான். இரண்டாம் ஜெயவர்மனே கெமர் சாம்ராஜ்யத்தை உலகிற்கு முதன் முதலில்



கி.பி.802இல் பிரகடனப்படுத்தியவன்.

கர்ப்பிணியாக இருக்கும் தன் மனைவியை இரண்டாம் ஜெயவர்மன் Prah Bat என்னும் இடத்திலுள்ள சாசனமொன்றைக் காட்டுவதற்கு அழைத்து வந்துள்ளான். தமக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்பதை விளக்க ஜெயவர்மன் தன் மனைவியை அங்கு கூட்டி வந்துள்ளான்.

சாசனத்தை மனைவிக்குக் காட்டிய போது கர்ப்பிணியாக இருக்கும் அரசி சிரமத்துடன் குனிந்து சாசனத்தை வாசித்தாள். அவள் நெற்றியில் வியர்வை முத்திட்டது.

சாசனத்தை வாசிக்கையில் "அகத்தியர்... வேத... யாசோமதி..." என மகாராணியின் உதடுகள் முணுமுணுத்தன.

(தொடரும்)





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

பகுதி - I

34

12) இவ்வுருவில் மறைந்துள்ள ஒரே அளவிலான ஆங்கில எழுத்துக்களைக் கண்டுபிடித்து அவற்றின் கீழ் கோடிடுக





1. AH
2. AD
3. HE

13) 2008 என்பது குறியீட்டு வடிவில் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.



8020 என்பது குறியீட்டு வடிவில் எழுதுக


1. 
2. 
3. 

14) பின்வரும் வினாக்களில் வினாக் குறியிடப்பட்டுள்ள கட்டத்துக்கு வரவேண்டிய எழுத்தை அல்லது எண்ணைத் தெரிவு செய்க

| | | | |
|---|---|---|---|
| எ | ஏ | | ஓ |
| ஊ | அ | ஆ | ஓ |
| உ | ஈ | இ | ஔ |
| இ | ஆ | அ | ∴ |

1. ஓ
2. ஐ
3. ஒ

15)




1. 10
2. 5
3. 20

பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கான விடையைத் தெரிவுசெய்க

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்

- சுப்பிரமணியபாரதியார் -

16) பாரதியாரிடம் வேண்டுதல் செய்கிறார் ?

1. மக்களிடம் 2. கடவுளிடம் 3. அன்னையிடம்


17) பாவம் எதற்கு உவமிக்கப்படுகின்றது?


1. பரிதிக்கு 2. பனிக்கு 3. சூரியனுக்கு

18) நசித்திடல் என்பதன் கருத்து யாது?

1. அழித்திடல் 2. மறைத்தல் 3. ஒழிந்திடல்


பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கான விடையைத் தெரிவுசெய்க






19)  எத்தற்குச் சமன் ?

1. 800 ml 2. 1000 ml 3. 1600 ml

20) பின்வருவனவற்றில் சரியான தொடர்பு எது ?

1 

2. 

3. 






# சிங்கமும் சிறு எலியும்

ஒரு நாள் மதிய வேளையில் சிங்கம் ஒன்று காட்டில் தூங்கிக் கொண்டு இருந்தது. அங்கு வந்த எலி சிங்கத்தின் மீது குதித்து விளையாடியது. இதனால் சிங்கம் விழித்தெழுந்தது. கோபம் கொண்ட சிங்கம் எலியைப் பிடித்து, “நீ எனக்கு இன்று நல்ல மதிய உணவாக போகிறாய்” என்று கர்ஜித்தது.

ஆனால் எலியோ சிங்கத்திடம், “என்னை மன்னித்து விடுங்கள் நான் தெரியாமல் உங்கள் மீது ஏறிவிட்டேன். என்னை சாப்பிடாதீர்கள். “எனக் கெஞ்சிக் கேட்டது. சிங்கத்திடம் “இன்று நீங்கள் என்னைக் கொல்லாமல் விட்டால் என்றாவது ஒரு நாள் உங்களுக்கு என் நன்றியைத் திருப்பிச் செலுத்துவேன்” என்றது. சிங்கமோ, “இவ்வளவு சிறிய உடம்பை வைத்துகொண்டு எனக்கு நீ உதவ போகிறாயா?” என்று எலியை ஏளனம் செய்தது. இருந்தாலும் எலியைக் கொல்லாமல் போக விட்டது.

சில நாள்களின் பின் சிறிய இறைச்சி துண்டிற்கு ஆசைப்பட்ட அந்தச் சிங்கம் வேடர்கள் வைத்திருந்த வலையில் சிக்கிகொண்டது. வலையில் அகப்பட்ட சிங்கம் பலமாகக் கர்ஜித்து அழுதது. அந்தச் சிறிய எலி சிங்கத்தின் சத்தத்தைக் கேட்டு அந்த இடத்திற்கு வந்து வலையைத் தன் பல்லினால் வெட்டி சிங்கத்தைத் தப்பிப் போக உதவியது. சிங்கம் இந்தச் சின்ன எலி என்னைக் காப்பாற்றி விட்டதே என்று வெட்கப்பட்டு எலிக்கு தன்னைக் காப்பாற்றியதற்கு நன்றி சொல்லிச் சென்றது.

# 06 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



# நிறம் தீட்டலாம் வாங்க





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் ‘கல்விக்கதிர்’ வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : ‘காலைக்கதிர்’
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# கேள்விஅறிவித்தல் (IFB-3)

## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் **திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர்** கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மூடிய விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.

2. இது தேசிய போட்டி விலைக் கேள்வி முறையாக இருந்தாலும் **வடக்கு மாகாண** நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட **கேள்வி தாரர்களுக்கு** மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

3. கேள்வி கோரல் அறிவித்தலில் குறிப்பிட்ட CIDA தரத்துக்கு கேள்விகள் கிடைக்காது விடின் அல்லது கிடைக்கப்பெற்ற கேள்விகள் தகுதியற்ற தாயின் அதற்கு மேற்பட்ட **CIDA** தரம் கருத்திலெடுக்கப்படும்

4. நிர்மாண ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய ஒப்பந்தக்காரர், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டட நிர்மாணத்தரத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் மோசடியில் ஈடுபட்ட ஒப்பந்க்காரர்களின் கறுப்புப் பட்டியலில் இடம் பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்ட செயலகபெறுகை அலகில் கேள்வி பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் ஒரு வேலைக்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளில் மட்டுமே விநியோகிக்கப்படும்

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :
021 221 4633, 021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile - 021 222 3674

6. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய (**Non refundable fee**) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை **மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ளபெறுகை அலகு அலுவலகத்தின் மூலம்** செலுத்தி பற்றுச் சீட்டை சமர்ப்பிக்குமிடத்து **25.05.2018 தொடக்கம் 14.06.2018 வரைமு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 02.00** மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித் தொகைகளுக்கான கேள்விப் பிணைப் பொறுப்பு கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 14.06.2018 பி.ப 02.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத்தினையும் (**Bid ID**), வேலை விவரத்தினையும் குறிப்பிடல் வேண்டும். கேள்விகள், சமுகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

8. விலைக் கேள்வி செல்லு படிக்காலம் கேள்வி இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து (**Bid Valid**) **90** நாட்களும், கேள்விப் பிணைப்பொறுப்பு (**யஷ்- நீளஉந்ஷஷ்மிதீ**) கேள்விதிறத்தல் திகதியிலிருந்து **120 நாட்களும்** ஆகும்.

9. முற்கேள்விக் கூட்டம் (**Prebid Meeting**) **07.06.2018** மு.ப **10.00** மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

10. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதிமுடிவாகஅமையும்.

11. அட்டவணை வருமாறு:-

| Bid ID. | Description of work | Estimated Amount (million) (Excluding VAT) | Contract Period (month) | Minimum Grade of ICTAD *(Clause – 3)* | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| JF/PROC/Vet/05/05/2018 | Construction of **Veterinary Office** at Meesaalai,Chavakachcheri DS Division | 8.27 | 04 | C7 or Above | 135,000 | 12.10.2018 | 3,250 |
| JF/PROC/Hosp/05/06/2018 | Construction of **Divisiona**l **Hospital** at Karaveddy | 25.67 | 06 | C4 or C5or Above | 390,000 | 12.10.2018 | 7,500 |
| JF/PROC/Hosp/05/07/2018 | Balance Work **No-06 Psychiatric at Base Hospital** at Thellipalai | 10.34 | 04 | C6 or C5 or Above | 165,000 | 12.10.2018 | 3,750 |
| JF/PROC/Net/05/08/2018 | Construction of **Net Mending Hall**Passaiyoor at Divisonal Secretariat – Jaffna twon. | 5.41 | 03 | C-7 or Above | 90,000 | 12.10.2018 | 2,000 |
| JF/PROC/Road/05/09/2018 | Reconstruction of Nainatheevu Jetty **Approch Road** | 30.00 | 05 | C5 or C4 or Above | 450,000 | 12.10.2018 | 9,000 |
| JF/PROC/Jetty/05/10/2018 | Reconstruction of Nainatheevu**Jetty** | 45.16 | 05 | C5 or C4or Above | 690,000 | 12.10.2018 | 12,000 |
| JF/PROC/Gra/05/11/2018 | Construction of **GramodhayaHealth Center** – Uduppidy at Karaveddy. DS Division | 4.98 | 03 | C-8 or Above | 75,000 | 12.10.2018 | 2,000 |
| JF/PROC/Gra/05/12/2018 | Construction of **Gramodhaya Health Center** –EluthuMadduval atChavakachcheri DS Division | 4.98 | 03 | C-8 or Above | 75,000 | 12.10.2018 | 2,000 |
| JF/PROC/Gra/05/13/2018 | Construction of **GramodhayaHealth Center** – Mathakal at Sandilipay. DS Division | 4.98 | 03 | C-8 or Above | 75,000 | 12.10.2018 | 2,000 |
| JF/PROC/Gra/05/14/2018 | Construction of **Fisherman Resting Halls** at Eluvaitivu and Paruthiyadaippu at Divisional Secretariat - Kayts | 3.43 | 03 | C-8 or Above | 60,000 | 12.10.2018 | 1,750 |
| JF/PROC/Hosp/05/15/2018 | Construction of **Male Ward at Divisional Hospital**- Delft | 10.20 | 04 | C6 or C5 or Above | 165,000 | 12.10.2018 | 3750 |

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்**

## தலவாக்கலை, டெறிக்கிலேயரில் 33 குடும்பங்கள் வெளியேற்றம்!



கொழும்பு, மே 24

தலவாக்கலை பொலிஸ் எல்லைக்குட்பட்ட டெறிக்கிலேயர் தோட்டத்தில் மண்சரிவின் காரணமாகப் பல வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நிலம் புதையுண்டதனாலும் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ் வாறு பாதிக்கப்பட்ட 33 குடும்பங்கள் பாது காப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

ஹற்றன் நுவரெலியா பிரதான வீதிக்கு அருகாமையிலும் சென்கிளேயஸ் நீர் வீழ்ச்சியை பார்வையிடும் இடத்திற்கு அருகாமையிலுள்ள நிலம் மற்றும் மண்சரிவு எச்சரிக்கை உள்ள வீடுகளுக்கு அருகாமையில் பெரியளவில் நீர் பெருக்கெடுத்துள்ளது எனத் தோட்ட நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கண்டாவளை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு அங்கஜன் இராமநாதனால் பந்தல் கூடாரம்!



யாழ்ப்பாணம் மே 24

கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 51 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட கண்டாவளை கிராம அபிவிருத்திச்சங்கத்திற்குபந்தல் கூடாரம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் 2017 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து இந்தக் கூடாரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின்போது சுதந்திரக்கட்சியின் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஐயம்பிள்ளை அசோக்குமார், உறுப்பினர் குமாரசாமி தர்மராசா ஆகியோரும், புன்னைநீராவிவட்டார பிரதிநிதி வேலாயுதம் கஜன் மற்றும் கிராமசேவையாளர் கிராம மக்கள்உள்ளிட்டபலரும்கலந்து கொண்டனர்.

## காலவதியான வீசாவுடன் சீனப் பிரஜைகள் இருவர் கைது

கொழும்பு, மே 24

ஒரு வருடத்திற்கும் மேலாக வீசா இன்றிச் சட்ட விரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த இரு சீனப் பிரஜைகளை நேற்று முன்தினம் கைது செய்துள்ளோம் என கொள்ளுபிட்டிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குடிவரவு- குடியகல்வுச் சட்டத்திற்கெதிராக வீசா இன்றில் நாட்டில் வசித்து வந்தனர் என கூறப்படும் சீனப் பிரஜைகள் இருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்கு; 26 படைவீரர்கள் பலி!

ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் சிரியப் படை வீரர்கள் 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஜிஹாதி குழுவினர் நாட்டின் பல பகுதிகளை கையகப்படுத்தி, தங்களது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்து நிர்வகித்து வருகின்றனர்.

இதுதவிர, ஐ.எஸ். பயங்கரவாதிகளும் சில பகுதிகளை கைப்பற்றித் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இந்தக் குழுக்களையும் அழிக்க அமெரிக்கவிமானப்படையின் துணையுடன் அந்த நாட்டு முப்படைகளும் தீவிரமாக போரிட்டு வருகின்றன.

இதற்கிடையே, கடந்த சில தினங்களுக்கு முன் நடை



பெற்றபோரில் கூட்டுப் படையினர் ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இருந்து கடைசி நகரையும் கைப்பற்றினர்.

இந்த நிலையில், சிரியாவின் படியா பகுதியில் சென்ற படைவீரர்கள் மீது ஐ.எஸ். பயங்கரவாதிகள் கார் குண்டு வெடிப்பு மூலம் தாக்குதல் நடத்தினர்.

இந்த வெடிகுண்டுத் தாக்குதலில் படைவீரர்கள் 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும், பலர்படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் சிரியாவில் உள்ள மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

## காளானை உண்ட 11 பேர் மரணம்



மேற்கு ஈரானில் சுமார் 10 மாகாணங்களில் நச்சுத் தன்மை கொண்ட காளான்களை உண்டதால் 11 பேர் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் 800 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

அத்துடன் இவர்களுள் 200 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுத் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட இருவருக்கு ஈரல் மாற்று அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் காளான்களால் ஏற்படும் நச்சுத் தன்மைக்கு பயனுறுதிப்பாடுள்ள மருந்து ஏதுவும் இல்லாதுள்ளது எனவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், உதிரியாக விற்கப்படும் காளான்களை வாங்க வேண்டாம் எனவும் உரிய முறையில் பொதி செய்து விற்கப்படும் காளான்களை மட்டும் வாங்குமாறும் அந்த நாட்டு அரசு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## துப்பாக்கி சூடு நடத்தியவர் சுட்டுக் கொலை!




அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் துப்பாக்கிச் சூடு நடத்திய ஒரு வரைப் பொலிஸார் சுட்டுக் கொன்றுள்ளனர்.

அமெரிக்காவில் கடந்த சில ஆண்டுகளாகத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நடந்து வருகின்றன. பொது மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அங்கு துப்பாக்கி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் துப்பாக்கிச் சூடு நடத்திய ஒருவரைப் பொலிஸார் சுட்டுக்கொன்றனர்

இதுதொடர்பாகப் பொலிஸார் கூறுகையில் –

புளோரிடா மாகாணத்தின் பனாமா சிட்டியில் அமைந்துள்ளது அடுக்குமாடிகுடியிருப்பு. இந்தக் குடியிருப்பில் நேற்றுமுன்தினம் காலை கெவின் ஹல்ரய்ட் (49 வயது), என்ற ஆசாமி தனது கையில் இருந்த துப்பாக்கியால் கண்மூடித்தனமாகச் சரமாரியாக சுடத் தொடங்கினான்.

இதையடுத்து, அந்தப் பகுதியில் சென்றவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர். சிலர் எங்களுக்கு தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடம்வந்தநாங்கள், அவரை மடக்கிப் பிடிக்க முயன்றோம். அவர் துப்பாக்கிச் சூட்டை நிறுத்தாததால் சுட்டுக்கொன்றோம். அதற்குப் பின்னரே அந்தப் பகுதியில் சகஜ நிலை திரும்பியது எனத் தெரிவித்துள்ளனர்.

## சீன ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு பின் கிம் ஜாங் உன் நடவடிக்கையில் மாற்றம்!

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

சீனஜனாதிபதி ஜி ஜிங்பிங் உடனான சந்திப்புக்குப் பிறகு வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் நடவடிக்கைகளில் மாற்றங்கள் தென்படுகின்றன என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை அமெரிக்காவுக்குப் பகிரங்க அணு ஆயுத மிரட்டல் விடுத்து வந்த வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் அண்மைக்காலமாக தனது போக்கை முற்றிலுமாக மாற்றிக்கொண்டார். இனி அணு ஆயுதச் சோதனைகள் எதையும் நடத்தமாட்டோம் என்றும் அறிவித்தார். மேலும், பகையாளி நாடாகக் கருதிய தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னையும் சமீபத்தில் சந்தித்து பேசினார்.

இதற்கிடையே, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்து பேசுவதற்கு ஆர்வமாக இருக்கின்றோம் எனகிம் ஜாங் உன் கூறினார்.

இதையடுத்து, இரு தலைவர்களும் ஜுன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்து பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், சீன ஜனாதிபதி ஜி ஜிங் பிங் உடனான சந்திப்புக்கு பிறகு வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் நடவடிக்கையில் மாற்றங்கள் தென்படுகின்றன என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில்–

சீன ஜனாதிபதி ஜி ஜிங்பிங் மற்றும் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் சந்திப்பு கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது.

சீன ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு பின்னர் கிம் ஜாங் உன் நடவடிக்கைகளில் பல்வேறு மாறுபாடுகள் தென்படுகின்றன. இது எனக்கு மிகுந்த சந்தோஷத்தை அளிக்கவில்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## மலேசிய முன்னாள் பிரதமரிடம் நான்கு மணி நேரம் விசாரணை

மலேசிய முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் அரச பணம் 680 மில்லியன் டொலர்களைத் தனது சொந்த வங்கி கணக்கில் முதலீடு செய்தார் என்ற ஊழல் வழக்கில் நேற்றுமுன்தினம் 4 மணி நேரம் விசாரணை நடைபெற்றுள்ளது.

மலேசியாவின் 14 ஆவது நாடாளுமன்ற தேர்தலில் 60 ஆண்டு களுக்குப் பிறகு எதிர்க்கட்சிகள் கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து 92 வயதான மகாதிர் முஹம்மது அந்த நாட்டின் பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

மலேசிய அரசின் நிதியில் இருந்து 680 மில்லியன் டொலர் அளவுக்கு முறைகேடு செய்து அந்தத் தொகையை தனது தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் மாற்றி விட்டார் என முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

குற்றச்சாட்டை தொடர்ந்து நஜிப் ரசாக் பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவராக இருந்த மகாதிர் முஹம்மது வலியுறுத்தி வந்தார். தேர்தலில் தோல்வி அடைந்த பின்னர் கட்சித் தலைவர் பதவியையும் நஜிப் ரசாக் ராஜினாமா செய்தார்.

அதைத் தொடர்ந்து அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி ஊழல் புரிந்துள்ளார் என நஜிப் ரசாக் மீது எழுந்த குற்றச்சாட்டு சூடு பிடிக்கத் தொடங்கியது. அவர் நாட்டை விட்டு வெளியேறக்கூடாது எனவும் தடை விதிக்கப்பட்டது.

நஜிப் ரசாக் வீட்டிலும், அவருக்கு சொந்தமான இடங்களிலும் பொலிஸார் அதிரடிச் சோதனைகள் நடத்தி, அங்கு இருந்து பணக்கட்டுகள், நகைகள் வைத்து நிரப்பப்பட்ட ஏராளமான கைப்பைகளை மீட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நஜிப் ரசாக் விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என்று அந்த நாட்டின் ஊழல் தடுப்பு கமின் அழைப்பு அனுப்பியிருந்தது.

இதைதொடர்ந்து நேற்றுமுன்தினம் ஊழல் தடுப்பு ஆணையாளர் முஹம் மதுஷுக்ரி அப்துல் முன்னாள் ஆஜரான நஜிப் ரசாக்கிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இதன்பாது 4 மணி நேரம் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப் பட்டது. (கு)

## ஏமனில் ஏவுகணை தாக்குதலில் அப்பாவி மக்கள் 5 பேர் உயிரிழப்பு

ஏமன் நாட்டின் புரட்சி இயக்கமான ஹவுதி நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பொதுமக்கள் 5 பேர் பலியாகியுள்ளனர் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஏமனில் ஜனாதிபதி மன்சூர் ஹாதி தலைமையிலான அரசுப்படைக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 3 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இந்தப்போரில் இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டு உள்ளனர்.

ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் பக்க பலமாக இருந்து வருகிறது. அதே சமயம் ஜனாதிபதி மன்சூர் ஹாதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் ஏமனில் வான்தாக்கு தலை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் தலைநகர் சானாவில் இருந்து 120 கி.மீ தொலைவில் உள்ள மேரிப் நகரில், மக்கள் கூட்டம் நிறைந்த சந்தை பகுதியை குறிவைத்து, கத்யூா என்ற ஏவுகணையை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வீசினார்கள்.

இந்த ஏவுகணை அந்தப் பகுதியில் விழுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிழந்தனர்.

மேலும், 22 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

# தூத்துக்குடியில் மீண்டும் பொலிஸார் தடியடி; மருத்துவமனையில் திரண்ட மக்கள் விரட்டியடிப்பு!





தூத்துக்குடி, மே 24

தூத்துக்குடியில் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் அரசு மருத்துவமனையில் போராட்டம் நடத்தியதமையால், அவர்களைபொலிஸார்தடியடிநடத்தி விரட்டியடித்தனர்.

தூத்துக்குடியில் ஸ்டெர் லைட் ஆலைக்கு எதிராக போராடியவர்கள் மீது நேற்று முன்தினம் பொலிஸார் நடத்திய துப்பாக்கி சூட்டில் 11 பேர் பலியானார்கள். பலர் காயமடைந்து தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் என கூறப்படுகிறது.

துப்பாக்கி சூட்டில் பலியானவர்களின் சடலங்கள் தூத்துக் 7குடி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் நேற்றுக் காலையில் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளனர்.

அவர்கள்மருத்துவமனையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசைக் கண்டித்தும் கோஷம் எழுப்பினர். இதையடுத்து அங்கு கூடுதல் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

ஸ்டெர்லைட் ஆலை மூடப்படும் என அரசு அறிவித்தால் தான் பலியானவர்களின் உடல்களை வாங்குவோம் என்று அவர்களது உறவினர்கள் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பிரேத பரிசோதனைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அவர்களைக் கலைந்து செல்லும்படி பொலிஸார் எச்சரித்தனர். ஆனால் போராட்டக்காரர்கள்கலைந்துசெல்லவில்லை. இதையடுத்து பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தனர். அதன்பின்னர் அரசு மருத்துவமனை பகுதி முழுவதும் பொலிஸார் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது என தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (க)

## ஸ்டெர்லைட் உரியையாளரின் லண்டன் வீட்டின் முன் தமிழர்கள் போராட்டம்!



ஸ்டெர்லைட் போராட்டக்காரளுக்குநிறுவனத்துக்கு எதிராக நடந்த துப்பாக்கி சூட்டை கண்டித்து, லண்டனில்உள்ளஉரிமையாளர் வீட்டின் முன் போராட்டம் நடைபெற்றது.

லண்டனில்ஸ்டெர்லைட் ஆலை உரிமையாளர் அனில் அகர்வால் வீடு அமைந்துள்ளது. தூத்துக்குடியில் நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச் சூடுச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டன் வாழ் தமிழர்கள் ஒன்று திரண்டனர்.

அவர்கள் அனில் அகர்வால் வீட்டின் முன்பு திரண்டனர். அங்கு ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கண்டனக் கோஷங்களை எழுப்பினர். கைகளில் பதாகைகளை ஏந்திப் போராட்டம் நடத்தினர். இதனால் அப் பகுதியில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது.

## ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கப் பணிகளுக்கு தடை விதித்தது உயர்நீதி மன்ற மதுரை கிளை!



தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையின் விரிவாக்கப் பணிகளுக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்த நிலையில், போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்மூடித்தனமாகத் துப்பாக்கி சூடு நடத்தினர்.

போராட்டக்காரர்களைக் கலைக்க எவ்வளவோ யுக்திகள் இருந்தும், தேச விரோதிகளைச் சுடுவது போன்று சரமாரியாக சுட்டமை நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

இந்தப் பரபரப்பான சூழ் நிலையில் ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்திற்கு எதிரான வழக்கில் உயர் நீதிமன்ற மதுரை கிளை நேற்று தீர்ப்பு வழங்கி உள்ளது.

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக பேராசிரியை பாத்திமா வழக்கு தொடர்ந்திருந்தார். அதில், ஸ்டெர்லைட் ஆலையின் 2 ஆவது பிரிவு அனுமதி பெறப்பட்ட இடத்தில் தொடங்கப்படாததால் விரிவாக்கப் பணியை நிறுத்த உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

ஆலை விரிவாக்கம் தொடர்பாக பொதுமக்களின் கருத்தையும் நிர்வாகம் கேட் கவில்லை என்றும் மனுவில் கூறியிருந்தார்.

இவ்வழக்கின் வாதப் பிரதிவாதங்கள் முடிவடைந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலையின் விரிவாக்கப் பணிகளை நிறுத்தும்படி நீதி பதிகள் சுந்தர், அனிதா சுமந்த் நேற்று உத்தரவிட்டனர்.

மேலும், ஆலையை நடத்துவதற்காக சுற்றுச்சூழல் அனுமதி கோரும் வேதாந்தா நிறுவனத்தின் மனுவை மத்திய அரசு பிரிசீலித்து 4 மாதங்களில் முடிவு செய்யவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## தூத்துக்குடியில் மீண்டும் துப்பாக்கி சூடு: ஒருவர் பலி!





தூத்துக்குடி, மே 24

தூத்துக்குடியில் ஸ்டெர் லைட் எதிர்ப்பு போராட்டக் குழுவினர் மீது பொலிஸார் மீண்டும் நேற்று துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

தூத்துக்குடியில்ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் நேற்றுமுன்தினம்பெருமளவில் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து தூத்துக்குடி பகுதியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டது. அனைத்து பகுதிகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் தீவிரமாக ரோந்து சுற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் தூத்துக்குடி அண்ணா நகர் பகுதியில் நேற்று போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மீண்டும் மோதல் ஏற்பட்டது. அப்போது போராட்டக்காரர்களைக் கலைக்கப் பொலிஸார் முயன்றனர்.

ஆனால், வாக்குவாதம் முற்றிய நிலையில், பொதுமக்கள் கற்களைவீசித்தாக்கினர்பொலிஸாரும் தடியடி நடத்தினர்.

ஒரு கட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால், போராட்டக்காரர்கள் சிதறி ஓடினர். இதில் காளியப்பன் (வயது 22) என்ற இளைஞர் உயிரிழந்தார். மேலும் 4 பேர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

போராட்டக்காரர்கள் கல்வீசி தாக்கியதில் பொலிஸ் தரப்பில் எஸ்.பி. உள்ளிட்ட சிலருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது.

## பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைப்பு; தூத்துக்குடியில் பதற்றம் நீடிப்பு!

தூத்துக்குடி, மே 24

தூத்துக்குடியில் பொலிஸ் துப்பாக்கி சூடு நடத்தி பல உயிர்களை பலி வாங்கிய நிலையில், நேற்று பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் பதற்றத்தை உருவாக்கியது.

தூத்துக்குடியில் ஸ்டெர் லைட் எதிர்ப்பு போராட்டத்தின்போது பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியதில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரது நிலைமை மோசமாக உள்ளது. துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்றன. தூத்துக்குடி நகரம் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டுகண்காணிப்புதீவிரப் படுத்தப்பட்டது. 144 தடை உத்தரவும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தூத்துக்குடி பிரைன் நகரில் சாலையோரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபொலிஸ் வாகனங்களுக்குத் தீவைக்கப்பட்டது. இதனால் பதற்றம் மேலும் அதிகரித்தது. ஒரு பஸ்ஸில் பற்றிய தீ சிறிது நேரத்தில் அணைக்கப்பட்டுவிட்டது. மற்றொரு பஸ்ஸில் பிடித்த தீ கொழுந்து விட்டு எரிந்ததால் அருகில் செல்ல முடியவில்லை.

இதையடுத்து அருகில் உள்ள வீடுகளில் வசிக்கும் மக்களை உடனடியாக வெளி யேறும்படி பொலிஸார் அறிவுறுத்தினர்.



## இடரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மண்சரிவு மற்றும் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட சுமார் 7,526 குடும்பங்கள் 194 தற்காலிகப் பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் காணப்படும் மழையுடனான வானிலையும் மேகமூட்டமான வானமும் இன்று சற்று அதிகரிக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்கு, தெற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

ஏனைய பிரதேசங்களில் குறிப்பாகப் பிற்பகல் வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் காலை வேளையிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ, மேற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லிமீற்றர் அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடகிழக்கு, வடமேல், மேல் மற்றும் தென் கடற்பரப்புகளில் காணப்படும் காற்றுடன் கூடிய மழை நிலைமை அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கக் கூடும்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சில இடங்களில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 – 40 கிலோமீற்றர் வரை காணப்படும்.

காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும்வேளைகளில்தற்காலிகமாகக் கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன் காற்றானது சடுதியாக மணித்தியாலத்துக்கு 70 – 80கிலோமீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் வீசக்கூடும் என்று திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையானமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுள்ளது. (ஐ)

## உயரமுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காயமடைந்த நிலையில் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கரவெட்டி, கரணவாய்கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மயில்வாகனம் ஜெகநாதன் (வயது – 50), அவரது மகன் ஜெகநாதன் சஞ்சீவன் (வயது – 29) ஆகிய இருவரும் உயர் அழுத்த மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

வீட்டில் டிஸ் ரீ.வி. இணைப்பு பழுதடைந்ததால், வீதியில் சென்ற கேபிள் ரீ.வி. வயரில் இணைப்பைப் பொருத்த முற்பட்ட வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கடும் மழை, இடி மின்னல் தாக்கங்கள் பரவலாக இடம்பெற்ற வேளையிலேயே இந்த நடவடிக்கையில் இவர்கள் தம்பாட்டில் ஈடுபட்டபோது இந்த அனர்த்தம் நேர்ந்திருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

மழை ஈரத்துக்கு மத்தியில் வயர்களைக் கையாண்டமையால் இந்த மின்தாக்கம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

மின் தாக்குதலுக்குள்ளான தந்தையையும்சகோதரனையும் காப்பாற்ற முயன்ற இளைய மகன் கையில் காயத்துடன் தெய்வாதீனமாக உயிர்தப்பினார் என்று நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இந்தச்சம்பவத்தால் கரவெட்டி பிரதேசமே சோகமயமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் 'வானகம் போன் சொப்' என்ற அலைபேசி விற்பனை நிலையத்தை உயிரிழந்த தந்தையும் மகனும் நடத்திவருகின்றனர்.

அத்துடன், கட்டைவேலி. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரான மயில்வாகனம் ஜெகநாதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முக்கிய உறுப்பினர் என்று அந்தக் கட்சி இரங்கல் வெளியிட்டுள்ளது. (ஐ–7)

## நகுலேஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மின்னல் தாக்கத்தால் சேதமடைந்தன.

கோபுரத்துக்கு வர்ணப்பூச்சு வேலைகள் இடம்பெற்று வரும் நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கே கோபுரக் கலசங்களில் வரகு தானியம் இடப்படுகின்றது. எனினும் நகு லேஸ்வரம் ஆலயக்கோபுரத்தின் சீரமைப்புப் பணிகள் இடம் பெறுவதால் கலசங்கள் பிரதிஷ்டை செய்யப்படவில்லை. அதனால் மின்னல் தாக்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை, குடாநாட்டில் நேற்றும் இரண்டு இடங்களில் மின்னல் தாக்கத்தால் 2 தென்னை மரங்களில் தீப் பிடித்ததுடன், வீடு ஒன்றின் மின் இணைப்பு பழுதடைந்தது. அத்துடன், சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கணினிக் கூட மின்மானியும் நேற்று மின்னல் தாக்கத்தால் தீப் பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ–7)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மன்றத்தில் தெரிவித்தார்.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் ஆயுட்காலம் முடிவடைந்துள்ள நிலையில், இன்றுவரை தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில், மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாதுள்ளமை குறித்து மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சபாநாயகரிடம் நேற்றுக் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதில் வழங்கிய போதே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கோட்டாபயவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், குற்றப்புலனாய்வுத் திணைக்களம், நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஆகியன நடத்திய விசாரணைகள் தொடர்பான தகவல்கள், அவை குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இலஞ்சஆணைக்குழு ஆகியன மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை இந்த அறிக்கை ல் உள்ளடக்க அரசு தீர்மானித்துள்ளது என்றும் தெரியவந்தது.

அமெரிக்கக் குடிவரவு மற்றும் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் வரும் சில விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாகக் கோட்டாபயவுக்கு எதிராக அரசு இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க உள்ளதாகக் கூறப்படுகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய களமிறங்கத் திட்டமிட்டுள்ள நிலையில் இந்த அறிக்கை அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. (ஐ)

## பிரதிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மைப்பு அவரை ஆதரிக்காது என்று கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், பிரதிச் சபாநாயகர் பதவிக்கு அங்கஜன் இராமநாதனை முன்னிறுத்துவதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரிந்துரைத்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் என்ற வகையில் இந்த நியமனத்துக்கு, மைத்திரிபால சிறிசேனவின் அனுமதிக்காகக் காத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

எனினும், அங்கஜன் இராமநாதனைப் பிரதிச் சபாநாயகராக நியமிப்பதற்கு இந்தக் கூட்டத்தில் எதிர்ப்பு வெளியிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அவரைக் கூட்டமைப்பு ஆதரிக்காது என்று கூறினார் என்று அரசியல் வட்டாரங்களை மேற் கொள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அங்கஜன் இராமநாதன், பிரதிச் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டால், 48 ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தப் பதவியைப் பெற்ற தமிழர் என்ற பெருமையைப் பெறுவார்.

இதற்கு முன்னர், 1968ஆம் ஆண்டு தொடக்கம், 1970ஆம் ஆண்டு வரை ஏ.சிதம்பரம் பிரதிச் சபாநாயகராகப் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விலைவாசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைப்பினர் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 'நிறுத்து நிறுத்து விலையேற்றத்தை நிறுத்து', 'அரிசி' தேங்காய்க்கு விலையேற்றம் பியருக்கோ விலை குறைப்பு', 'குடிக்கக் கொடுத்து குடி கெடுக்கும் அரசாங்கம்', 'எரிபொருள்களின் விலையேற்றத்தை மீளப்பெறு' போன்ற கோசங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ–100)

## மீளக்குடியமர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமாக வழங்க வேண்டு மென எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். அவர்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிபடுத்தக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அரச அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

கடந்த கால யுத்தத்தின்போது உள்ளூர் மற்றும் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து மீளத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது அரசினதும் அரச அதிகாரிகளினதும் கடமையாகும். எனவே இதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்துடன் அவர்களின் சொந்தக் காணிகளைத் துப்புரவு செய்து குடியேறுவதற்கு வன பரிபாலன, வன ஜீவராசிகள் திணைக்களங்கள் தடைகளை ஏற்படுத்தி வருவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. யுத்தத்தினால் இடம் பெயரும் போது அப்பகுதியில் வாழ்ந்தமைக்கான ஆவணங்கள் இருப்பின் அவர்களை உடனடியாக அப்பகுதியில் மீளக்குடியேற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் அவர்களுக்கான குடியிருப்பு வசதிகள் மற்றும் அடிப்படை தேவைகளை அரச அதிகாரிகள் பூர்த்தி செய்து கொடுக்கவேண்டும். – என்றார். (ஐ)

## முரசுமோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) புதைத்து வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றின் அனுமதி பெற்று மண்ணை அகழ்ந்து வெடிபொருள்களை மீட்கும் பணி நேற்று நண்பகல் ஆரம்பிக்கப்பட்டது.

'அட்ராக் கண்' என அழைக்கப்படும் ஆயுதத்துக்குப் பயன்படுத்தப்படும் குண்டுகளே பெருமளவில் மீட்கப்பட்டன.

ஒரு பெட்டியில் 90 குண்டுகள் வீதம் 38 பெட்டிகள் தோண்டி எடுக்கப்பட்டன. அத்துடன் ரி56 துப்பாக்கிப் பயன்படுத்தும் ரி 56 என்ற ரவைகள் 2 பெட்டிகள் (ஆயிரத்து 500 ரவைகள்) மீட்கப்பட்டன என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ–7)

## போராளியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒன்றும், கைத்துப்பாக்கித் தோட்டாக்கள் ஐந்தும் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் முன்னாள் போராளி ஒருவரின் வீட்டு முற்றத்தில் அகழ்வுப் பணிகளை விமானப் படையினர் நேற்று மேற்கொண்டனர்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் உள்ள முன்னாள் போராளியான முனியாண்டிராஜா ரஞ்சன் (தீபன்) என்பவரின் வீட்டில் வெடிபொருள்கள் புதைத்துவைக்கப்பட்டிருப்பதாக விமானப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இது தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு அகழ்வுப் பணியை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதியளித்தது.

இதனை அடுத்து அந்த வீட்டின் முற்றத்தில் பொலிஸார், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர் ஆகியோர் முன்னிலையில் விமானப் படையினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டனர். அகழ்வுப் பணிக்குப் பைக்கோ இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

இதன்போது சுமார் ஆறு அடி ஆழத்தில் பொலித்தீனால் சுற்றப்பட்டு பெட்டி ஒன்றினுள் வைத்துப் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருட்களை அடையாளம் காட்டும் கருவி(ஸ்கானர்) மற்றும் 5 கைத்துப்பாக்கி தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டன.

இவை பாவிக்கக்கூடிய நல்ல நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் போராளியான முனியாண்டிராஜா ரஞ்சன் முன்னர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையில் உயர் தரப்புக்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர் எனவும், மீள்குடியேற்றத்தின் பின்னர் பரபரப்பாகப் பேசப்பட்ட கோபி அப்பன் பிரச்சினையில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பாதுகாப்புத் தரப்பினர் கைதுசெய்ய முற்பட்டபோது நாட்டை விட்டுத் தப்பிச் சென்று புலம்பெயர் நாட்டில் வசித்து வருகின்றார் எனவும் கூறப்பட்டது. (ஐ–71)

## கோட்டாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெளியிட்டுள்ளது.

இலங்கை மற்றும் அமெரிக்க இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ள கோட்டாபய, அமெரிக்கக் குடியுரிமையிலிருந்து விலகிக் கொள்ளும் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

இந்நிலையில் அமெரிக்காவின் குடியேற்ற மற்றும் தேசிய சட்டத்தின் கீழுள்ள சில சிறப்பு விதிகளின் கீழ் கோட்டாபயவின் குடியுரிமையை நீக்க முடியாது என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய போட்டியிடத் திட்டமிட்டுள்ளார். இலங்கையில் அரசமைப்பின் படி, இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒருவர் தேர்தலில் போட்டியிட முடியாது. அதற்கமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்பார்ப்பில் தனது அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிக் கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆர்ஜென்ரீனா அணியில் இகார்டிக்கு இடமில்லை



ரஷ்யாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கான 23 பேர் கொண்ட ஆர்ஜென்ரீனாவின் குழாம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அறிவிக்கப் பட்டுள்ள குழாமில் முன்கள வீரரான மௌரோ இகார்டி இடம்பெறவில்லை.

இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் அணியின் தலைவரான மௌரோ இகார்டியே நடப்பு சீரி ஏ பருவகாலத்தில் அதிகமாக 29 கோல்களைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில், லயனல் மெஸ்ஸியுடன் சேர்ஜியோ அகுரோ, கொன்ஸலோ ஹியூகைனும் லயனல் மெஸ்ஸியை ஒத்த விளையாடும் பாணியைக் கொண்ட போலோ டிபாலாவும் அந்தக் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குரோஷியா, நைஜீரியா, ஐஸ்லாந்துடன் குழுவில் இடம்பெற்றுள்ள ஆர்ஜென்ரீனா, அடுத்த மாதம் 16ஆம் திகதி மாலை 6.30மணிக்கு இடம்பெறவுள்ள ஐஸ்லாந்துடனான போட்டியுடன் தனது உலகக் கிண்ணத் தொடரை ஆரம்பிக்கின்றது.

**குழாம்:**

கோல் காப்பாளர்கள்: சேர்ஜியோ றொமாரோ, வில்லி காபலெரோ, பிராங்கோ அர்மனி.

பின்கள வீரர்கள்: கப்ரியல் மெர்காடோ, பெடெரிக்கோ பஸியோ, நிக்கொலஸ் ஒட்டமென்டி, மார்கோஸ் றோஜோ, நிக்கொலஸ் டக்ளபிக்கோ, ஸ்கேவியர் மரானோ, மார்கோஸ் அகுனா, கிறிஸ்டியன் அன்சல்டி.

**மத்தியகள வீரர்கள்:** எவர் பனீகா, லூகாஸ் பிக்லியா, அஞ்சல் டி மரியா, ஜியோவனி லோ செல்ஸோ, மனுவல் லன்ஸினி, கிறிஸ்டியன் பவோன், மக்ஸ்மில்லியானோ மெஸா, எடுவார்டோ சல்வியோ.

முன்கள வீரர்கள்: லயனல் மெஸ்ஸி, கொன்ஸலோ ஹியூகைன், போலோ டிபாலா, சேர்ஜியோ அகுரோ.

# சம்பியனானது யாழ். மாவட்ட செயலகம்



வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்ட செயலக அணிகளுக்கிடையிலான ஆண்கள், பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில், இரண்டு பிரிவிலும் யாழ். மாவட்ட செயலக அணி சம்பியனாகியது.

வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் கடந்த ஞாயிறு நடைபெற்ற இறுதிப் போட்டிகளில், ஆண்களில், முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியை 21 - 13, 21 -16 என்ற நேர் செட்களில் வென்றும் பெண்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணியை 21 - 16, 21 - 12 என்ற நேர் செட்களில் வென்றே யாழ். மாவட்ட செயலக அணி சம்பியனாகிருந்தது.

# உலகக் கிண்ண உதைபந்தாட்டத்துக்கு மொஸ்கோ பல்கலை மாணவர் எதிர்ப்பு

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மொஸ்கோ பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து ஆர்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.



ரஷ்யாவில் அடுத்த மாதம் 14 ஆம் திகதி உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் நேற்று முன்தினம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிகள் அடுத்த மாதம் 14 ஆம் திகதி ஆரம்பித்து, ஜூலை 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ரஷ்யாவின், 11 நகரங்களில் நடைபெறவுள்ள இந்தப் போட்டித் தொடரில் சுமார் 32 அணிகள் பங்கேற்கவுள்ளன.

இந்த நிலையில், போட்டிகள் நடத்தப்படவுள்ள மொஸ்கோ உதைபந்தாட்ட மைதானத்துக்கு அருகில் பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. உலகக் கிண்ணப் போட்டிகள் நடத்தப்படும் காலப்பகுதியில் தமக்கான பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும், பல்கலைக் கழக வளாகம் உள்ள பகுதியில் உதைபந்து மைதானம் அமைந்துள்ளதால் பரீட்சைகளுக்கு அது இடையூறாக அமையும் என மாணவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன், அந்தப் பகுதியில் பார்வையாளர்களுக்கான வலயம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருவதும் தம்மை மேலும் எரிச்சல் அடையச் செய்துள்ளதாகவும் மாணவர்களின் கூறியுள்ளனர்.

இவ்வாறு புதிய பார்வையாளர்களுக்கான வலயத்தை அமைப்பதற்காகப் பயன்தரு மரங்கள் சில தறிக்கப்படுவதாகவும் மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். ஆர்பாட்டக்காரர்கள் கைகளில் பதாகைகளை ஏந்திப் பேரணியாகச் சென்று தமது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மஹேல கிண்டல்



இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கான தேர்தலில் பழைய முகங்களே போட்டியிடுவது குறித்து முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்த்தன கேலி செய்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தேர்தலில் பல புதிய முகங்களைக் காண்பது மகிழ்ச்சியாகவுள்ளது என மஹேல ஜயவர்த்தன தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரசிகர்கள் பலரும் இதேபோன்று பழைய முகங்கள் போட்டியிடுவது குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தேர்தலில் எனக்கு ஆர்வம் இல்லை. முன்னாள் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவேண்டும் என பிரசாத் பெரேரா என்பவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முட்டாள் கும்பல் – நாங்கள் புதிய தலைமுறையை பிரதிநிதித்துவம் செய்யும் என எதிர்பார்த்தோம், நிசாந்த ரணதுங்க ஊழலுக்குப் பிரபலமானவர் என டிலான் ஜயசிங்க என்பவர் தெரிவித்துள்ளார்.



# ஹைதராபாத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது சென்னை!

விறுவிறுப்பாக நடைபெற்ற சென்னை மற்றும் ஹைதராபாத் அணிகளுக்கிடையிலான பிளே ஓப் சுற்றின் முதல் போட்டியில் சென்னை அணி 2 விக்கெட்டுகளால் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

மும்பை, வங்கடே மைதானத்தில் இன்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி ஆரம்பத்திலேயே முதல் விக்கெட்டை இழந்து தடுமாறியது. எனினும் தனது நிதானமான ஆட்டத்தை வெளிக்காட்டிய ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

ஹைதராபாத் அணி சார்பில் கார்லஸ் பிரத்வைட் ஆட்டமிழக்காமல் 4 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அத்துடன் வில்லியம்சன் 24 ஓட்டங்களையும், யூசப் பதான் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பிராவோ 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, ஷாகர், நெகிடி, தாகூர் மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 140 என்ற இலகுவான ஓட்ட இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி ஆரம்பத்தில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. எனினும் பிளசிஸ் கைகொடுக்க சென்னை அணி 19.1ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

சென்னை அணி சார்பில் பிளசிஸ் 4 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 67 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அத்துடன் ரெய்னா 22 ஓட்டங்களையும், தாகூர் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சண்டீப் ஷர்மா, காஹூல், ரஷிட் கான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு புவனேஸ்குமார் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணியின் வெற்றிக்கு வித்திட்ட பிளசிஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

சென்னை அணி இந்தப் போட்டியின் வெற்றியின் மூலம் இறுதிப் போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வீரர்களின் சம்பளம் 34 வீதத்தினால் அதிகரிப்பு



எதிர்வரும் 2018 – 2019ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய கிரிக்கெட் அணி வீரர்களின் சம்பளம் 34 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அதிக அளவு இலாபம் அடைந்ததால் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

ஒப்பந்த வீரர்கள் 33 பேரைத் தவிர டெஸ்ட், ஒருநாள் மற்றும் 20/20 போட்டிகளிலும் விளையாடும் அனைத்து வீரர்களுக்கான சம்பளங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# வடக்கு மாகாண வைத்தியர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு இவ்வாரம்

## மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு




**மன்னார், மே 24**

**வடக்கு மாகணத்தில் கடமையாற்றும் அரச வைத்தியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை இந்த வாரத்துக்குள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில் -**

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச வைத்தியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் நீண்ட காலமாக வழங்கப்படாத நிலையில் நிலுவையில் காணப்பட்டன.

இந்தப் பிரச்சினை தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சு மத்திய அரசுடன் பல்வேறு பேச்சுக்களை மேற்கொண்டது. எனினும் மேலதிக நேர் கொடுப்பனவுகள் வழங்கப்படாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் அடையாளப் பணிப்பகிஸ்கரிப்பு ஏற்பாடு செய்யப்பட்டுப் பணிப்பகிஸ்கரிப்பும் இடம் பெற்றது.

எனினும் மத்திய அரசிடம் இருந்து இதற்கான நிதி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டபோதும் அது உரிய காலத்தில் கிடைக்கவில்லை. தற்போது மத்திய அரசின் திறைசேரியில் இருந்து குறிப்பிட்ட காலத்திற்குள் மாகாண திறைசேரிக்கு நிதி வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக மாகாணத்திறைசேரியில் இருந்து குறிப்பிட்ட காலத்துக்குரிய நிலுவைகளை இந்த வாரத்துக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாகாண திறைசேரியில் இருந்து இந்த வாரத்துக்குள் வைத்தியர்களுக்கான நிலுவையில் உள்ள மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் – என்றார். (ஐ)

## 50, 000 குடும்பங்களுக்கு வடக்கு - கிழக்கில் கல் வீடு

### அமைச்சரவை ஒப்புதல்



கொழும்பு, மே 24

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் போரால் பாதிக்கப்பட்ட 50 ஆயிரம் குடும்பங்களுக்குச் செங்கல் மற்றும் சிமெந்திலான பாரம்பரிய நிலையான வீடுகளை அமைத்து வழங்குவதற்கான வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தக்காரர்களிடம் கேள்விமனு கோரப்பட்டது. அதில் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விமனுக்களில் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான வீடமைப்பு வேலைத்திட்டம், ஐக்கிய நாடுகள் சபையின் திட்டம் தொடர்பான அலுவலகம், இலங்கையில் மனித நேயத்திற்கான நிழல் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் இலாபத்தை இலக்காகக் கொள்ளாத தொண்டு அமைப்புகளால் சமர்ப்பிக்கப்பட்ட வீடமைப்பு நிர்மாணத் துறையில் 3 மாற்று ஆலோசனைகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதுடன் இவை தொடர்பில் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சு இணக்கப்பாட்டுக் குழுவின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக முதற்கட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இவ்வாறான 25 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு இந்த அமைப்புக்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு என்ற ரீதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

## தடுப்பு முகாம்களைப் பார்வையிடுவது குறித்து செஞ்சிலுவையுடன் ஒப்பந்தம்

கொழும்பு, மே 24

இலங்கையிலுள்ள தடுப்பு முகாம்களைப் பார்வையிடுவது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட உள்ளது. அமைச்சரவை இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தோற்றம் பெற்றுள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளைப் பார்வையிடுவது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

இதனடிப்படையில், சுய சுதந்திரத்தை இழந்த நபர்களுக்கு விடிவை ஏற்படுத்துவதற்கான ஒத்துழைப்புகள் மற்றும் மனிதாபிமானச் செயற்பாடுகள் தொடர்பில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது. இதில் இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சு கைச்சாத்திட உள்ளது. (ஐ)

## ரணில் – மைத்திரி அரசு விரைவில் வீடு செல்லும்

### கூறுகின்றார் மஹிந்தானந்த

கொழும்பு, மே 24

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் ரணில் – மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசை வீட்டிற்கு அனுப்புவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

இதன்படி அடுத்த மாதத்திலிருந்து நாடு முழுவதிலும் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றுப் பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தின் முதலாவது போராட்டம் கொழும்பில் ஆரம்பிக்கப்படும்.

இந்த நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக அனைத்துத் தீர்மானங்களையும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனே மேற்கொள்கின்றார்.

அவர் தான் இந்த நாட்டின் முதலமைச்சராக இருக்கின்றார். 2014ஆம் ஆண்டில் நல்லாட்சியிடம் அரசை வழங்கும்வரை மக்களிடம் இருந்து அறவிடப்படும் வரிவருமானம் 1 ரில்லியன் ரூபாவாகும்.

ஆனால் 2018ஆம் ஆண்டு டிசம்பர் ஆகும்போது 2 ரில்லியன் ரூபாவாக அதனை அதிகரிக்கவுள்ளதாக அரசு கூறுகிறது.

எனவே கூட்டு எதிரணி என்றவகையில் மக்கள் மீது குவிக்கப்படுகின்ற வரிச்சுமைக்கு எதிராகவும், பொருட்களின் விலைகள் அதிகரிப்பிற்கு எதிராகவும் அடுத்த மாதத்திலிருந்து இலங்கை முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம்.

அதன் முதற்படியாகக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம். இலங்கை முழுவதிலும் போராட்டங்களை நடத்தி இந்த வருடம் டிசெம்பருக்கு முன்னதாக நல்லாட்சி அரசை வீட்டிற்கு அனுப்பிவைக்கும் வேலைத்திட்டத்தை அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பிக்க உள்ளோம் – என்றார். (ஐ)

# பிரித்தானிய ஈழத் தமிழரின் செயற்பாட்டால் பெரும் நெருக்கடி நிலையில் இலங்கை அரசு

லண்டன், மே 24

பிரித்தானியாவில் வசிக்கும் புலம்பெயர் ஈழத் தமிழர்கள் இலங்கை அரசுக்குப் பல்வேறு வகையில் கடும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றனர்.

ஈழத் தமிழ் மக்களுக்குப் பக்கபலமாகப் புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வரிசையில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைத் தொடர்ச்சியாகக் கொடுத்து வருகின்றனர்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் லிஸ் கென்டல் உடனான சந்திப்பு ஒன்று தமிழர் தகவல் நடுவகத்தின் தீவிர செயற்பாட் டாளர் பொன்ராசா புவலோஜன் தலைமையில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் மகேந்திரலிங்கம் யோகானந், விமலா கரன் தர்மபாலன் மற்றும் ரனிதா தியாகேசு ஆகியோரும் கலந்து கொண்டனர்.




பிரித்தானியாவில் உள்ள தமிழர் தகவல் நடுவகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பிரித்தானியா இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதைத் தடுக்கும் நடவடிக்கையில் தன்னை இணைத்துக் கொண்ட பொன்ராசா புவலோஜன் கூறுகையில்,

பிரித்தானியா அரசு இலங்கை சிங்களப் பேரினவாத அரசுக்குப் பல ஆண்டு காலமாக ஆயுதங்களை விற்பனை செய்து வருகின்றது. இந்த விடயம் தொடர்பில் பெருமளவிலான பிரித்தானியா நாடாளுமன்ற உறப்பினர்களைச் சந்தித்து வருவதாகவும் அவர்கள் தமக்கு ஆதராவாக குரல் எழுப்புவதாகவும் கூறினார்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுற்ற நிலையிலும் பல பில்லியன் மதிப்புமிக்க ஆயுதங்களை இலங்கை அரசுக்கு பிரித்தானியா விற்பனை செய்தது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர்கள் மீதான அடக்குமுறை, இன அழிப்பு மீண்டும் தொடர்கிறது என்பதனையே இது உறுதி செய்கின்றது. இலங்கை அரசால் ஈழத் தமிழர் மீது நடந்தேறிய இனவழிப்பிற்கு எதிராகச் சர்வதேச நீதி மன்றத்தில் போர்க்குற்ற விசாரணையை இலங்கை அரசுக்கு எதிராக நடத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் பிரித்தானியா அரசு பிரேரணை ஒன்றையும் முன்வைத்திருந்தது.

அதுமட்டுமின்றி மனித உரிமைகளை மீறும் எந்தவொரு நாட்டிற்கும் தாம் ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை என ஐக்கிய நாடுகளின் ஆயுத வர்த்தக ஒப்பந்தத்தில் 2013 இல் கைச்சாத்திட்ட பிரித்தானியா அதே ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அரசுக்கு 62 பில்லியன் பவுன்ட்ஸ் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்திருந்தது என்று பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சுட்டிகாட்டப்பட்டுள்ளது. (ஐ-100)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.